பக்கங்கள் 22 + 03

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 23 புதன்கிழமை 06.03.2024 அதிர்வு 219

## பேஸ்புக் செயலிழப்பால் 10 கோடி டொலர் இழப்பு




பேஸ்புக், மெசஞ்சர் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகிய சமூக ஊடகங்கள் செயலிழந்தமையால் 'மெட்டா' நிறுவனம் 10 கோடி அமெரிக்க 04 ▶



# அரசின் பயணப் பாதை வெற்றி என்பது உறுதி

## அதிகாரத்துக்காக நான் ஒருபோதும் பொய் சொல்லவில்லை என்று நாடாளுமன்றில் ஜனாதிபதி ரணில் இன்று விசேட உரை

"அரசு முன்னெடுக்கும் வேலைத்திட்டங் களின் பலனாக நாட்டின் பொருளாதாரம் வலுவடைந்திருக்கின்றது. எதிர்காலத்தில் மக்களுக்கு மேலும் பல நிவாரணங்களைப் பெற்றுகொடுக்க எதிர்பார்த்திருக்கின்றோம். அந்தச் செயற்பாடுகள் அனைத்தும் அறிவியல் முறைமைகளுக்கு அமைய, படிப்படியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதிகாரத்துக்காக ஒருபோதும் நான் பொய் சொல்லவில்லை. அதிகாரத்துக்காக அன்றி நாட்டை மீளக் கட்டியெழுப்புவதே எனது நோக்கமாகும்." 04 ▶

### தங்கம் கடத்தல் விவகாரம்:

## சபை அமர்வில் பங்கேற்க சப்ரிக்கு ஒரு மாதம் தடை



புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு இன்று முதல் ஒரு மாதத்துக்கு நாடாளுமன்றத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

அவர் நாடாளுமன்றத்தை அவமதித்துள்ளார் என்று சிறப்புரிமைகள் குழு தீர்மானித்துள்ளமையால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவர் சட்டவிரோதமாகத் தங்கம் மற்றும் தொலைபேசிகளை நாட்டுக்குக் கொண்டு வந்த சம்பவம் தொடர்பில் சிறப்புரிமைகள் குழு இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது என்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் இன்று அறிவித்துள்ளார்.

## வாகன விபத்தில் மூவர் உயிரிழப்பு



வாகன விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநாகல், பொத்துஹெர, பூலோகொல்ல சந்திக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

குருநாகலில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த மரக்கறி பாரவூர்தியுடன் எதிர்த் திசையில் வந்த ஓட்டோ மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். 04 ▶

# ரணில் வசமானது பஸிலின் கோட்டை

## இனி நடக்கப்போவது என்ன?

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அரசியல் கோட்டையாக விளங்கிய கம்பஹா மாவட்டத்தில் உள்ள மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பாலான உறுப்பினர்களின் ஆதரவை ரணில் விக்கிரமசிங்க பெற்றுள்ளார்.

மொட்டுச் சின்னத்தின் கீழ் போட்டியிட்டு சபைக்கு தெரிவான 13 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஐவர் மாத்திரமே தற்போது மொட்டுக் கட்சி பக்கம் நிற்கின்றனர்.

2020 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் கம்பஹா மாவட்டத்தில் 65.76 சதவீத வாக்குகளுடன் 13 ஆசனங்களை மொட்டுக்கட்சி கைப்பற்றியது.

மேற்படி 13 நாடாளுமன்ற உறுப்பினர்களில் கம்பஹா மாவட்ட தலைவரான அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, அமைச்சர் நளின் பெர்ணான்டோ, இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி, நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா, நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர, இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண ஆகியோர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான நிலைப்பாட்டில் உள்ளனர்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவே களமிறங்க வேண்டும் எனவும் அறிவித்து வருகின்றனர்.

அதேபோல் மொட்டுக் கட்சி பட்டியலில் கம்பஹா மாவட்டத்தில் விருப்பு வாக்கு பட்டியலில் முதலிடம் பிடித்த நாடாளுமன்ற உறுப்பினர் நாலக கொடஹேவா, டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையில் செயற்பட்டு வருகின்றார்.



அவர் தற்போது சஜித் ஆதரவு நிலைப்பாட்டில் உள்ளார்.

இராஜாங்க அமைச்சர் இந்திக அநுருத்த, நாடாளுமன்ற உறுப்பினர்களான கோகிலா குணவர்தன, உபுல் மகேந்திர ராஜபக்ஷ, பிரதிப் விதான, மிலான் ஜயதிலக்க ஆகியோரே மொட்டு கட்சி பக்கம் நிற்கின்றனர். எனினும், நாமல் ராஜபக்ஷ தலைமையில் திவுலபிட்டிய ஆசனத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் கம்பஹா மாவட்டத்தில் உள்ள எம்.பிக்களில் ஒருவர் மாத்திரமே (இந்திக அநுருத்த) பங்கேற்றுள்ளார்.

கம்பஹா மாவட்டம் என்பது பஸில் ராஜபக்ஷவின் அரசியல் கோட்டையாகவும் விளங்குகின்றது. அம்மாவட்டத்தில் போட்டியிட்டே அவர் 4 இலட்சத்துக்கு மேற்பட்ட விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்தார்.

அதேவேளை, பஸில் ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மொட்டுக் கட்சி சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளது. இந்தச் சந்திப்பின் பின்னர் தீர்க்கமான சில அரசியல் முடிவுகள் தொடர்பான அறிவிப்புகள் வெளியாகவுள்ளன .

தமிழ், சிங்கள புத்தாண்டுக்குப் பின்னர் நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாள் நிர்ணயிக்கப்படும் என்று ராஜபக்ஷ குடும்பத்தின் முக்கியஸ்தரான இலங்கைக்கான முன்னாள் ரஷ்ய தூதுவர் உதயங்க வீரதுங்க தெரிவித்தார்.

மொட்டுக் கட்சி தலைமையகத்தில் பஸில் ராஜபக்ஷவுடன் நேற்று நடைபெற்ற சந்திப்பின் பின்னரே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார். மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டவர்களும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

“ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும். புத்தாண்டு முடிந்த பின்னர் நாடாளுமன்றத் தேர்தலுக்கு நாள் நிர்ணயிக்கப்படும். அதில் பெரும்பான்மைப் பலத்தை மொட்டுக் கட்சி கைப்பற்றும் என்ற நம்பிக்கை உள்ளது.

ஜனாதிபதியின் பதவிக் காலம் முடியும் வரை ரணிலுக்கு ஆதரவு வழங்குவோம். அதன்பின்னர் ஆதரவு இல்லை. முதலில் நாடாளுமன்றத் தேர்தலே நடத்தப்படும். அதன்பின்னர் ஜனாதிபதித் தேர்தல் பற்றி பேசுவோம்.” - என்று உதயங்க வீரதுங்க மேலும் கூறினார்.

பஸில் ராஜபக்ஷ மார்ச் 5 ஆம் திகதி நாடு திரும்புவார் என்ற தகவலை முதன்முதலில் உதயங்க வீரதுங்கவே வெளியிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, தேர்தலை இலக்கு வைத்து ஐக்கிய தேசியக் கட்சி மார்ச் 10 ஆம் திகதி முதலாவது மக்கள் கூட்டத்தை குருநாகல், குளியபிட்டியவில் நடத்தவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் கட்சி அழைப்பையேற்று ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பார் எனவும், சுமார் ஒரு வருடங்களுக்குப் பின்னர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் மேடையேறுகின்றார் எனவும் அவர் ஐ.தே.கவின் உப தலைவர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

## வீட்டுக்கு முன்பாக நிறுத்தப்பட்டிருந்த ஓட்டோ இனந்தெரியாதோரால் திருட்டு

(நானுஓயா நிருபர்)

நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பங்களாஹத்த பகுதியில் வீட்டுக்கு முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ ஒன்று இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நானுஓயா பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

cp YS 3772 என்ற இலக்கத்தகடு இலக்கத்தைக் கொண்ட டிவிஎஸ் கறுப்பு நிற ஓட்டோவே திருடப்பட்டுள்ளது.

இந்த ஓட்டோ தொடர்பான தகவல் கிடைத்தால் 0775343893 என்ற இலக்கத்துக்கு அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு உடனடியாகத் தெரிவிக்குமாறு நானுஓயா பொலிஸார் மற்றும் உரிமையாளர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.



# ரணில் – ராஜபக்ஷ கூட்டு அரசுக்கு சமாதி கட்ட சகலரும் திரள்வோம்!

## தேசிய மக்கள் சக்தி அறைகூவல்



"ரணில் – ராஜபக்ஷ அரசு ஜனநாயகத்தை ஒழித்துக் கட்டும் நடவடிக்கைகளிலேயே இறங்கியிருக்கின்றது. இதற்கு எதிராக நாங்கள் பெருந்திரளான பெண்களை அணிதிரட்டிக்கொண்டு களத்தில் இறங்கியிருக்கின்றோம். நாட்டை அழிக்கின்ற இந்த ஆட்சியாளர்களை விரட்டியடிப்பதற்குப் பொது மக்களுக்கும் நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்."

– இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுப் பேரவை உறுப்பினர் சரோஜா சாவித்திரி போல் ராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

"எதிர்வரும் 8 ஆம் திகதி 113 ஆவது சர்வதேச மகளிர் தினத்தை தேசிய மக்கள் சக்தியின் பெண்கள் அமைப்பாகிய நாங்கள் கொண்டாடவிருக்கின்றோம். இத்தருணத்தில் பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ள நாட்டு மக்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களைக் கொள்வனவு செய்ய முடியாது, மருத்துச் செலவைத் தாங்கிக்கொள்ள முடியாது நெருக்கடியான வாழ்க்கைக்கு முகம்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக 70 இலட்சம் பேர் அதாவது, இலங்கையின் சனத்தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் அடுத்தவேளை உணவை பெற்றுக்கொள்வதற்கு போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இதற்கான பிரதான காரணம் 2022 ஆம் ஆண்டிற்கு பின்னர் இலங்கையில் ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடியாகும். இந்தப் பொருளாரதார நெருக்கடியின் காரணத்தால் கடந்த இரு வருடங்களில் 15 இலட்சத்துக்கு மேற்பட்டவர்கள் வேலையில்லாமல் திண்டாடிக்கொண்டிருக்கின்றார்கள்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற மக்களுக்கு தொழில்வாய்ப்புகள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளன. இம்மக்களின் விவசாயக் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளன. நில ஆக்கிரமிப்பு தொடர்கிறது. விவசாயக் காணிகள் விடுவிக்கப்படவில்லை. அதைப்போல, இளைஞர்கள் போதைப்பொருள் பாவனையில் சிக்கவைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த நிலைமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

வடக்கு கிழக்கில் காணிப் பிரச்சினை, காணாமல் ஆக்கப்பட்டோர் பிரச்சினை, கணவனை இழந்த பெண்கள் முகம் கொடுக்கின்ற பிரச்சினை, மீனவர்களின் பிரச்சினை போன்றவற்றுக்கு இன்னமும் தீர்வு கிட்டவில்லை. இவற்றுக்கு எவ்வித பதிலையும் வழங்காது அரசுகள்ள மௌனம் சாதித்துக்கொண்டிருக்கின்றது.

ஆனால், அரசோ கூத்துக்களைக் காண்பித்து மக்களைத் திரட்டுவதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கின்றது. தற்போது 24 குடும்பங்களுக்கு அஸ்வெசும எனும் பெயரில் நிவாரணம் வழங்கும் முயற்சி முன்னெடுக்கப்படுகின்றது. சமுர்த்தி கொடுப்பனவு பெற்ற 16 இலட்சம் குடும்பங்கள் தற்போது அஸ்வெசும திட்டத்தில் 24 இலட்சமாக அதிகரித்திருக்கின்றது. எனவே, மேலும் 8 இலட்சம் குடும்பங்கள் பொருளாதார ரீதியாக வீழ்ச்சியடைந்துள்ளமை தெளிவாகின்றது.

அதுமட்டுமன்றி, தற்போதைய விலைவாசியுடன் ஒப்பிடுகையில் பெருந்தோட்ட மக்களுக்கு வழங்கப்படுகின்ற 1000 ரூபா சம்பளம் நாளாந்த வாழ்க்கைக்கு போதாமல் இருக்கின்றது. இந்த மக்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கையை எடுக்க வேண்டும். மலையகத்தில் கல்வி மற்றும் சுகாதார வசதிகளை மேம்படுத்த வேண்டும். அந்த மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தியாகிய நாங்கள் வலியுறுத்துகிறோம்.

நாளுக்கு நாள் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து வருகிறது. கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம் மறுக்கப்படுகின்றது. அநீதிக்கு எதிராகப் போராடுகின்ற மக்களை இந்த அரசு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் மூலம் ஒடுக்கி வருகின்றது. ரணில் – ராஜபக்ஷ அரசு ஜனநாயகத்தை ஒழித்துக் கட்டும் நடவடிக்கைகளிலேயே இறங்கியிருக்கின்றது. இதற்கு எதிராக நாங்கள் பெருந்திரளான பெண்களை அணிதிரட்டிக்கொண்டு களத்தில் இறங்கியிருக்கின்றோம். நாட்டை அழிக்கின்ற இந்த ஆட்சியாளர்களை விரட்டியடிப்பதற்குப் பொதுமக்களுக்கும் நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்." – என்றார்.

# பாடசாலையில் தவறி வீழ்ந்து மாணவி சாவு!

பாடசாலையில் தவறி வீழ்ந்து மாணவி ஒருவர் உயிரிழந்தார்.

கலவானை – மீபாகம பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் தரம் 8இல் கல்வி கற்று வந்த 13 வயதான மாணவியே நேற்று இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த மாணவி, வகுப்பறையில் இருந்து வெளியில் செல்லும்போது, கல் ஒன்றில் அவரது கால் சிக்குண்டுண்டதையடுத்துக் கீழே வீழ்ந்தார்.

இதையடுத்து அவர் கலவானை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## பேஸ்புக்...

டொலர் வருமானத்தை இழந்துள்ளது என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

உலகம் முழுவதும் பேஸ்புக், மெசஞ்சர் மற்றும் இன்ஸ்டாகிராம் போன்ற சமூக ஊடகங்கள் நேற்று திடீரென சில மணிநேரம் செயலிழந்தன.

பேஸ்புக், மெசஞ்சர் மற்றும் இன்ஸ்டாகிராம் அனைத்தும் ஒரே நேரத்தில் செயலிழந்தது இதுவே முதல் முறை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேஸ்புக், மெசஞ்சர் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகியவற்றின் வீழ்ச்சியைத் தொடர்ந்து 'மெட்டா' நிறுவனத்தின் வருமானம் 1.5 சதவீதம் சரிவடைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாகன...

விபத்தில் ஓட்டோவில் பயணித்த நால்வர் படுகாயமடைந்து குருநாகல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி மூவர் உயிரிழந்துள்ளனர்.

இதையடுத்துப் பாரவூர்தியின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளைப் பொத்துஹெர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அரசின்...

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாளுமன்றத்தில் இன்று விசேட உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சில அரசியல் குழுக்கள் அதிகாரத்தைப் பெற்றுகொள்ளும் நோக்கில் யதார்த்தத்தை மறந்துவிட்டு, கற்பனைக் கதை சொல்கிறார்கள் எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, இன்று நாட்டின் முன்பிருக்கும் பிரச்சினைகளுக்கு, சில்லறைத்தனமான தீர்வுகள் இல்லை என்றும், அவ்வாறான தீர்வுகளால் நாட்டின் பொருளாதாரத்தை மீளமைக்க முடியாதென்பதை அடிப்படை பொருளாதார அறிவுள்ளவர்கள் அறிவர் எனவும் தெரிவித்தார்.

அரசு பயணிக்கும் பாதையின் வெற்றி உறுதி செய்யப்பட்டிருக்கின்றது எனவும், அந்தப் பாதையில் முன்னேறிச் செல்வதற்கான சட்டத் திட்டங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க எதிர்பார்த்திருக்கின்றோம் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருப்பதாகவும் கூறினார்.

போகும் பாதையில் முன்னேறிச் சென்று பொருளாதாரம் வலுவடைவதன் பலனை, நாடு என்ற வகையில் அடைந்துகொள்வதா? இல்லாவிடின் அந்தச் செயன்முறையிலிருந்து விடுபட்டு ஓரிரு வருடங்களுக்கு முன்பிருந்த இருள் யுகத்துக்குள் மீண்டும் செல்வதா? என்பதை தீர்மானிக்குமாறும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இன்று நமது நாடு ஓரளவு பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைந்துள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கிறார்கள். எனினும், இதனை ஏற்றுக்கொண்டதாக காட்டிக் கொள்ளாமல், நாம் முன்னெடுத்துள்ள வேலைத்திட்டத்தை விமர்சிப்பவர்களும் இருக்கின்றனர்.

பொருளாதாரம் வலுவாக இருப்பதாகத் தோன்றினாலும், மக்கள் அதை உணரவில்லை என்று சிலர் குற்றம் சாட்டுகின்றனர். மக்கள் மீது தேவையற்ற வகையில் வரிச்சுமையை அதிகரித்துள்ளதாகவும் கூறுகின்றனர். மின்சாரக் கட்டணம் மற்றும் எரிபொருள் விலைகள் தேவையற்ற வகையில் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறுகின்றனர்.

பொதுவாக, பூவைக் காயப்படுத்தாமல் தேன் எடுப்பதைப் போல் மக்களைத் துன்புறுத்தாமல் வரி வசூலிக்க வேண்டும் என்ற பழமொழி உண்டு. ஆனால் அந்த நடைமுறையை நாங்கள் பின்பற்றவில்லை என்று விமர்சிக்கின்றனர். எனினும், இவ்வாறு விமர்சிப்பவர்கள் ஒரு விடயத்தை மறந்துள்ளனர். பூக்களை நசுக்கித் தேன் எடுக்கும் சந்தர்ப்பங்களும் உள்ளன என்பதை அவர்கள் மறந்துள்ளனர். இது நமக்கு சிறந்தவொரு படிப்பினை. ஒரு சாதாரண சூழ்நிலையில், பூக்களை நசுக்காமல் தேன் எடுக்க முடிந்தாலும், இருளில் பயணிக்கும்போது அவ்வாறு செய்ய முடியாது. இன்று நாமும் இருளில் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். கடந்த காலத்தில் நாம் பொருளாதார தொங்கு பாலத்தில் பயணிக்க நேரிட்டது. இருளில் பயணிக்க நேரிட்டது. இவ்வாறான ஆபத்தான நிலை எங்களுக்கு ஏன் ஏற்பட்டது? எமது பொருளாதாரம் ஏன் வங்குரோத்தடைந்தது? கடந்த கால அரசுகள் தொலைநோக்குப் பார்வையற்ற முடிவுகள் எடுத்தமை ஒரு காரணமாகும்.

அரசின் பல சாதகமான வேலைத் திட்டங்களை பல்வேறு அரசியல் கட்சிகள் எதிர்த்து, சீர்குலைத்ததும் மற்றொரு காரணமாகும். இந்தக் கட்சிகள் பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தின.

இதனால் நாட்டுக்கு முறையான, பரிபூரணமான பொருளாதாரத் திட்டமொன்று தேவைப்பட்டது. இதுபோன்ற திட்டத்தை செயல்படுத்த நாம் பல சந்தர்ப்பங்களில் முயற்சித்தோம். எனினும், இவ்வாறான திட்டத்தைத் தொடர்ந்து முன்னெடுக்க வாய்ப்புக் கிடைக்காமல் போனது.

1989 ஆம் ஆண்டு, கலாநிதி சந்திம விஜேபண்டார, புத்தசரண பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையின் ஒரு பகுதியை மேற்கோள் காட்ட விரும்புகின்றேன்.

அக்கட்டுரையில் புத்தர் உபதேசித்த குடதந்த சூத்திரத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

"திட்டமில்லாத வளர்ச்சி சாத்தியமற்றது. திய நிகாயாவின் குடதந்த சூத்திரம், வளர்ச்சிக்கான திட்டங்களின் அவசியத்தை விளக்குகிறது. வளர்ச்சியடையாத நாட்டில் பாட்டாளி வர்க்கம், அரசுக்கு எதிராக நெருக்கடியை ஏற்படுத்தும்போது, அரசாங்கம் ஒரு திட்டத்தின் மூலம் நாட்டை எவ்வாறு மேம்படுத்தியது என்பதை இது காட்டுகிறது.

இது அரசின் அடிப்படைப் பொருளாதாரத் திட்டம். இது வெற்றியடைந்ததாகவும், இதனால் மக்கள் பொருளாதார ரீதியாக மட்டுமன்றி, மதிப்புகளின் அடிப்படையில், நல்ல சமூக உறவுகளுடன், மகிழ்ச்சியாகவும் வாழ்ந்தனர் என்று இந்தச் சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தகைய அறிவியல் மற்றும் திட்டமிட்ட வழியை நாங்கள் இதற்கு முன்னர் பின்பற்றவில்லை. சில குழுக்கள் அத்தகைய வேலைத் திட்டத்தை செயல்படுத்த அனுமதிக்கவில்லை. இதனால் நாட்டிற்கு என்ன நடந்தது என்பதை அனைவரும் அறிவர். நாடு வங்குரோத்தடைந்தது. கடனைச் செலுத்த முடியாமல் போனது. பொருளாதார நெருக்கடியை சமாளிக்க முடியாமல் போனது.

சாதாரண குடிமகன் முதல் பெரிய தொழிலதிபர் வரை அனைவரும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். மின்சாரம் துண்டிக்கப்பட்டது. வரிசைகளின் யுகம் ஏற்பட்டது. பலர் தொழில்களை இழந்தனர். தொழில்களும் வணிகங்களும் சரிந்தன. சிலர் நாட்டை விட்டு வெளியேறினர். நாடு முழுவதும் தீப்பற்றி எரிந்தது. பொருளாதார நரகத்தில் நாடு விழுந்தது.

இந்த நேரத்தில் நாடு அராஜகமாக மாறியது. ஆட்சி நிர்வாகம் சீர்குலைந்தது. பொருளாதார ரீதியில் மட்டுமன்றி சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் கடுமையான ஆபத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

இந்த நிலைமையில் இருந்து நாட்டை மீட்கும் சவாலை யாரும் ஏற்க முன்வரவில்லை. அழைக்கப்பட்ட அனைவரும் மறுத்துவிட்டனர். தீயில் குதித்து தீயை அணைக்கும் தைரியம் யாருக்கும் இல்லை.

ஆனால் நாட்டுக்காக அந்த சவாலை நான் ஏற்றுக்கொண்டேன். தீயின் நடுவே சென்று தீயை அணைக்க ஆரம்பித்தேன்.

அந்த அயராத முயற்சியின் பலனை இன்று நாடு முழுவதும் அனுபவித்து வருகிறது. இந்த நேரத்தில், அந்த மாபெரும் முயற்சியில் எனக்கு உறுதுணையாக இருந்த அனைவரையும் நன்றியுடன் நினைவுகூர்கின்றேன்.

நாங்கள் ஒரு சிறந்த, பயணத் திட்டத்திற்கு அடித்தளமிட்டோம். சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து பொருளாதாரத் திட்டத்தைத் தயாரித்தோம்.

அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தியதன் விளைவாக, நாடு நாளுக்கு நாள் இயல்பு நிலைக்கு வந்தது. அழுத்தம் தணிந்தது. துயரங்கள் மெல்லக் குறைய ஆரம்பித்தன.

அதைத் தெளிவுபடுத்தும் சில பொருளாதாரக் குறிகாட்டிகளை இந்த அவையில் முன்வைக்க விரும்புகின்றேன்.

2022 முதல் 2023 இரண்டாம் காலாண்டு வரை 6 காலாண்டுகளுக்கு

(05ஆம் பக்கம் பார்க்க)

# நான்காம் பக்கத் தொடர்ச்சி

தொடர்ந்து சுருங்கிய நமது பொருளாதாரம், 2023 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் இருந்து புத்துணர்ச்சிப் பெற ஆரம்பித்தது. இந்த ஆண்டு 2 முதல் 3 சதவீத வளர்ச்சியை எட்ட முடியும் என்று சர்வதேச நிதி நிறுவனங்கள் கணித்துள்ளன.

2022 ஆம் ஆண்டை விட 2023 ஆம் ஆண்டில் அரச வருமானத்தை 50 சதவீதத்திற்கும் மேல் அதிகரிக்க முடிந்தது. கடந்த ஆண்டு முதன்மைக் கணக்கில் உபரித் தொகையைப் பெற முடிந்தது. இதனால், மூன்று, நான்கு ஆண்டுகளாக அரசுக்கு சேவை வழங்கிய ஒப்பந்ததாரர்களுக்கு அனைத்து நிலுவைத் தொகையையும் முடித்துள்ளோம்.

2022 ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களில், அரசுக்குச் சொந்தமான 52 பெரிய நிறுவனங்கள் மொத்தமாக ரூ.720 பில்லியன் நட்டத்தை எதிர்கொண்டது. ஆனால் 2023 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியில் இந்த நிறுவனங்களிடமிருந்து ரூ.313 பில்லியன் இலாபமாகப் பெற முடிந்தது.

பொருளாதார நெருக்கடியால் பல வர்த்தக நிறுவனங்கள் மூடப்பட்டுள்ளதை நாம் அறிவோம். ஆனால் பொருளாதாரத்தின் மறுமலர்ச்சியுடன், பல வணிக நிறுவனங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டில், 17,819 நிறுவனங்கள், கம்பனிப் பதிவாளர் நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. 2023 இல் 22,376 நிறுவனங்கள் பதிவு செய்யயப்பட்டுள்ளன. 2024 ஜனவரியில் 1,995 புதிய நிறுவனங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன.

மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் ஒருங்கிணைந்து மேற்கொண்ட பொருளாதார முகாமைத்துவம் காரணமாக, 2022ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 70 சதவீதமாக இருந்த பண வீக்கம், 2024ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 5.9 சதவீதமாகக் குறைந்தது.

பண வீக்கம் குறைந்ததால் 30 சதவீதமாக இருந்த வட்டி வீதத்தை 2023ஆம் ஆண்டில் 10 சதவீதத்தையும் விடக் குறைத்து சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்களுக்கும், நுகர்வோருக்கும் நிவாரணம் வழங்க முடிந்தது.

2022 ஏப்ரல் நடுப்பகுதியில் வெறும் 20 மில்லியன் அமெரிக்க டொலராக இருந்த அந்நியச் செலாவணி கையிருப்பை, தற்போது 3 பில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரிக்க முடிந்தது. தனியார் மோட்டார் வாகனங்கள் தவிர, இறக்குமதிக்கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

1977 இற்குப் பிறகு முதன்முறையாக, 2023ஆம் ஆண்டில், கொடுப்பனவு கையிருப்பின் நடப்புக் கணக்கில் உபரியை ஏற்படுத்த முடிந்தது. இதன் காரணமாக கடந்த வருடத்தில் இதே காலப்பகுதியில் ரூ.363 ஆக இருந்த அமெரிக்க டொலரின் பெறுமதி நேற்றைய நிலவரப்படி ரூ.308 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. ரூபாயின் பெறுமதி வலுப் பெற்றுள்ளது.

இந்த பொருளாதார முன்னேற்றத்தின் விளைவுகளை இன்று முழு சமூகத்திலும் காண முடிகிறது.

கை டிரக்டர்கள் முதல் பெரிய பஸ்கள் வரை பல்வேறு வாகனங்களில் அனுராதபுரத்திற்கும் சிவனொலிபாத மலைக்கும் எத்தனை மக்கள் சென்று வழிபடுகின்றனர்? தலவில, மடுதேவாலய யாத்திரைக்கு எத்தனை பேர் செல்கிறார்கள்? நுவரெலியாவுக்கு எத்தனை பேர் சுற்றுலா செல்கிறார்கள்? கார் வாங்கிய கடனை அடைக்க முடியாமல், வீதியோரம் நிறுத்தி, சிறுசிறு தொழில் செய்வோர் எத்தனையோ பேர் உள்ளனர். தூரப்பயணம் செல்லும் ரயில் பெட்டியில் இருக்கையை முன்பதிவு செய்வது எவ்வளவு கடினமாக இருக்கிறது? முன்பதிவு செய்யப்படாத பெட்டிகளில் எத்தனை பேர் பயணிக்கிறார்கள்? நாடு முழுவதும் எத்தனை சுற்றுலாப் பயணிகள் உள்ளனர்?

வீட்டை விட்டு வெளியே வர முடியாமல் இருந்தவர்கள் இன்று அதிகமாக பயணம் செய்கின்றனர். பொழுது போக்க வெளியே செல்கிறார்கள். நோய்வாய்ப்பட்டவரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவோ, சடலத்தை மயானத்திற்குக் கொண்டு செல்லவோ வாகனத்திற்கு சிறிது எரிபொருள் பெற முடியாத நாடாக இருந்தோம். வீட்டில் சமைக்க எரிவாயு இல்லாமல், வெளியே விறகு அடுப்பில் சமைத்த நாடு இது. பிள்ளை நோய்வாய்ப்பட்டால், பெரசிடமோல் மாத்திரையை தேடி வீடுவீடாகச் சென்ற நாடு இது. அந்த நிலை இப்போது முற்றிலும் தலைகீழாக மாறிவிட்டது.

இன்று நாம் காணும் மற்றும் உணரும் பொருளாதார முன்னேற்றத்தை சிலர் விமர்சிக்கின்றனர். கடன் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக கூறுகின்றனர். கடனை மீளச் செலுத்த ஆரம்பித்தால், நாடு மீண்டும் மோசமான நிலைக்குத் தள்ளப்படும் என்று அவர்கள் வாதிடுகின்றனர். நாம் தற்பொழுது நரகத்தில் ஒரு இடைவேளைப் பெற்று, இந்த நிலையை அனுபவிப்பதாக அவர்கள் கூறுகிறார்கள்.

அந்த விமர்சனங்கள் எந்த அடிப்படையும் அற்றவை என்பதைக் கூற விரும்புகிறேன்.

வெளிநாட்டுக் கடன்கள் உட்பட அனைத்து கடன்களையும் மறுசீரமைப்பது குறித்து தற்போது ஆராய்ந்து வருகிறோம். இந்தப் பேச்சுகள் விரைவில் வெற்றிகரமாக முடிவடையும் என நம்புகிறோம்.

கடனை மீளச் செலுத்தாதிருக்க 2023 முதல் 2027 வரை தற்காலிக சலுகைக் காலம் கிடைக்கும் என நம்புகிறோம். அதன் பின்னர் 2027 முதல் 2042 வரையிலான காலக்கட்டத்தில் கடனை மீளச் செலுத்த நடவடிக்கை எடுப்போம்.

இலங்கை கடன் சுமையில் உள்ள நாடு. 2022 ஆம் ஆண்டுக்குள், நாம் வருடாந்தம் சுமார் ஆறு பில்லியன் அமெரிக்க டொலரை, வெளிநாட்டுக் கடனாகச் செலுத்த வேண்டியிருந்தது. இது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.5 சதவீதமாகும். ஒரு நாடு என்ற ரீதியில் தாங்க முடியாத தொகை இது.

கடன் மறுசீரமைப்புப் பேச்சுவார்த்தைகள் வெற்றி பெறுவதன் மூலம், வருடாந்தம் செலுத்த வேண்டிய வெளிநாட்டுக் கடனை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 9.5 சதவீதத்தில் இருந்து 4.5 சதவீதமாகக் குறைக்க முடியும். இது 50 வீத குறைப்பாக இருக்கும்.

2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நாம் எட்டிய பொருளாதார வளர்ச்சியை இதேபோன்று தொடர்ந்தால், அரச வருமானத்தை அதிக சதவீதத்தில் தக்க வைத்துக் கொள்ள முடியும். அப்படி நடந்தால் கடனை மீளச் செலுத்துவது நாட்டுக்குச் சுமையாக இருக்காது.

தற்போது, அரச வருமானத்தை, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 11 சதவீதமாக உயர்த்த முடிந்துள்ளது. அதற்காக எமக்கு வற் வரியை விதிக்க நேரிட்டது. அது மிகவும் கடினமான முடிவு. அவ்வாறு வரி விதிக்கும் முடிவை நாங்கள் மிகவும் கஷ்டத்துடனே எடுத்தோம். ஆனால் இந்த பொருளாதார நோயைக் குணப்படுத்த வேறு மாற்றுவழி இல்லை. இந்த வலியை எமக்கு சிறிது காலம் அனுபவிக்க நேரிடும்.

வற் வரி விதிப்பால், அரசின் வருமானம் வலுப்பெற்றது. கடனை அடைக்கும் பலம் எம்மிடம் உள்ளது என்பது சர்வதேச சமூகத்தின் முன் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அரசின் வருமானம் அதிகரித்து, பொருளாதாரம் மீண்டு வருவதால், ரூபாயின் பெறுமதி வலுவடைந்துள்ளது. ரூபாயின் மதிப்பு வலுவடையும்போது எரிபொருள் உள்ளிட்ட இறக்குமதிப் பொருட்களின் விலை குறையும். ரூபாயின் பெறுமதி வலுவடைவதால் அனைத்து வற் செலுத்தும் நிறுவனங்களும் இப்போது பலனடைகின்றன. முழு நாடும் அந்த நன்மையைப் பெறுகிறது. எதிர்காலத்தில் பல நன்மைகள் கிடைக்கும்.

இந்தப் பாதையில் நாம் வெற்றிகரமாகத் தொடர்ந்தால், இந்த ஆண்டு இறுதிக்குள் நமது பொருளாதாரம் ஸ்திரமாகிவிடும்.

மேலும், அரசு நிறுவனங்களின் நட்டத்தை மக்கள் வரிப் பணத்தில் இருந்து ஈடுசெய்யும் முறையை நிறுத்தியுள்ளோம். அந்த நிறுவனங்கள் மறுசீரமைப்பு செய்யப்பட்டு முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும்.

வரிவலையமைப்பு விரிவுபடுத்தப்படும். அந்தத் திட்டத்தின் கீழ், 2023 ஆம் ஆண்டில் மொத்த வரிக் கோப்புகளின் எண்ணிக்கை 1 மில்லியனுக்கும் அதிகமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இது 130 சதவீதம் அதிகரிப்பாகும். பணம் அச்சடிப்பது முற்றிலும் நிறுத்தப்பட்டுள்ளது.

அரச நிதி மற்றும் பொருளாதார நிர்வாகத்தை மேம்படுத்தவும் எளிதாக்கவும் சட்டக் கட்டமைப்பு மற்றும் செயல்முறைகளை வலுப்படுத்தவும் நவீனப்படுத்தவும் தேவையான சட்ட சீர்திருத்தங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

தெற்காசியாவில் முதன்முறையாக,

(6ஆம் பக்கம் பார்க்க)

# ஐந்தாம் பக்கத் தொடர்ச்சி

ஆளுகை கண்டறியும் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் நிர்வாகத்தை மேம்படுத்தவும் ஊழல் அபாயங்களை எதிர்த்துப் போராடவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

முதலீட்டை ஈர்ப்பதற்காக ஒரு புதிய நிறுவனம் நிறுவப்படும். வெளிநாட்டு நிதித் துறைகளுக்கான தொடர்ச்சியான பிரவேசம் உறுதிப்படுத்தப்படும்.

விவசாயத்துறை நவீனமயப்படுத்தப்படும். உணவுப் பாதுகாப்பின் கீழ் பாரிய அளவிலான பண்ணைகளை ஆரம்பிக்க பல வெளிநாடுகள் ஏற்கனவே விருப்பம் தெரிவித்துள்ளன.

வெளிநாட்டுச் சந்தைகள் படிப்படியாக ஏற்றுமதிக்காக திறக்கப்படுகின்றன. இங்கு, பாரம்பரியமற்ற ஏற்றுமதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

நமது நாட்டை பசுமை மற்றும் டிஜிட்டல் பொருளாதாரமாக மாற்றி, பிராந்திய பொருளாதார மற்றும் சேவை மையமாக அபிவிருத்தி செய்வோம். துறைமுக நகரம், சர்வதேச நிதி மையமாக மாற்றப்படும்.

ஆனால், இந்தத் திட்டத்தின் ஊடாக தொடர்ந்து பயணிப்பதன் மூலம் மாத்திரமே இவை அனைத்தையும் மேற்கொள்ளமுடியும்.

நாம் இதுவரை கடைப்பிடித்து வந்த திட்டங்கள் காரணமாக நாட்டின் பெரும்பான்மையான மக்களுக்கு பல வசதிகளையும் சலுகைகளையும் வழங்க முடிந்துள்ளது.

‘உறுமய’ திட்டத்தின் கீழ் இருபது இலட்சம் குடும்பங்கள் காணி உரிமையாளர்களாக மாறுவர். பல தலைமுறைகளாக இழந்த காணி உறுமையை அவர்கள் மீண்டும் பெறுவார்கள்.

வறுமையில் இருக்கும் மற்றும் பாதிக்கப்படக் கூடியவர்களை பொருளாதார நெருக்கடியிலிருந்து பாதுகாக்கும் வகையில் சமூகப் பாதுகாப்புக்கான கொடுப்பனவை மூன்று மடங்காக உயர்த்த முடிந்தது. அதனால் குறைந்த வருமானம் பெறும் 24 இலட்சம் குடும்பங்களுக்கு ‘அஸ்வெசும’ வழங்கப்படுகிறது. 45 லட்சம் பாடசாலை மாணவர்களுக்கு ‘சுரக்ஷா’ காப்புறுதித் திட்டம் வழங்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்பம் கற்பிக்கும் அனைத்துப் பாடசாலைகளுக்கும் ‘ஸ்மார்ட்’ வகுப்பறைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஒரு இலட்சம் பிள்ளைகளுக்கு ஜனாதிபதி நிதியம் புலமைப் பரிசில்களை வழங்குகிறது. நோயாளிகளுக்கு வழங்கும் நிவாரணத் தொகையையும் ஜனாதிபதி நிதியம் இரட்டிப்பாக அதிகரித்துள்ளது.

‘மலைநாட்டு தசாப்தம்’ என்ற திட்டத்தின் கீழ் 89 பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள கிராமங்களை மேம்படுத்தும் பணிகளை ஆரம்பிக்கவுள்ளோம். அதற்காக ஒரு பிரதேச சபைக்கு ரூ.100 மில்லியன் வரையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வரவு செலவுத் திட்ட பன்முகப்படுத்தப்பட்ட நிதியைக் கொண்டு தேர்தல் தொகுதிகளில் அபிவிருத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. 25 பிரதேச சபைகளைத் தெரிவு செய்து விவசாய நவீனமயமாக்கல் வேலைத் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

சுற்றுலா வியாபாரம் வளர்ச்சி கண்டுள்ளது. அதனால் பலர் பயனடைகின்றனர். அந்தத் துறையில் மேலும் பல முன்னேற்றங்களை ஏற்படுத்த முயற்சிக்கிறோம். சரிந்து கிடந்த பொருளாதாரம் ஓரளவு வலுவடைந்துள்ளது. அதன் பலனாக படிப்படியாக மக்களுக்கு நிவாரணங்களை வழங்குகிறோம். வர்த்தகச் சமூகத்தின் நலனுக்காக பராடே சட்டத்தை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளோம். இம்மாதத்தில் மின்சாரக் கட்டணத்தில் நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் நாட்களில் பாடசாலை புத்தகங்கள், கற்றல் உபகரணங்கள், சுகாதார உபகரணங்கள், மருந்து உள்ளிட்ட பொருட்களுக்கு வற் வரி விலக்களிக்க எதிர்பார்த்துள்ளோம். எதிர்காலத்தில் வற் வரியைக் குறைக்கவும் முடியும்.

நாம் நாளாந்தம் நெருக்கடிகளை எதிர்கொண்டாலும், வலுவான பொருளாதாரத்தைக் கட்டமைத்து வருகிறோம். பொருளாதாரம் வலுவடையும்போது மக்களுக்கு மேலும் நிவாரணங்களை வழங்குவோம். உரிய திட்டங்களின் கீழ் அவற்றைச் செய்கிறோம். பொருளாதாரத்திற்கு நெருக்கடி ஏற்படும் வகையில் நிவாரணம் வழங்கி நாட்டை மீண்டும் நரகத்திற்குள் தள்ளிவிட நாம் தயாரில்லை. அதனால் அனைத்துச் செயற்பாடுகளையும் படிப்படியாகவும் அறிவியல் முறைக்கமையவுமே முன்னெடுத்து வருகிறோம்.

சில்லறைத்தனமான விடயங்களால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுக்காண முடியுமென சிலர் கருதுகின்றனர். வெளிநாடுகளிலிருக்கும் இலங்கையர்களிடமிருந்து 10 – 100 டொலர் வரை சேகரிக்கலாம் என சிலர் யோசனை கூறுகிறார்கள். அது பாடசாலையை அண்மித்து வசிப்போரிடம் பணம் சேகரித்து பாடசாலையை அபிவிருத்தி செய்ய முற்படுவது போன்ற செயலாகும். பொருளாதாரம் பற்றிய அறிவை ஓரளவேனும் கொண்டிருப்பவர்கள், அவ்வாறான முறைகளில் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்பதை அறிவார்கள்.

இந்தத் தருணத்தில் நம் முன்பிருக்கும் கேள்வி ஒன்றுதான்! நாம் தற்போது செல்லும் பாதையில் முன்னேறிச் செல்வதா? இல்லையா? என்ற கேள்வியே இருக்கிறது.

இவ்வாறு முன்னேறிச் சென்று, பொருளாதாரம் வலுவடைந்ததன் பலனை ஒரு நாடு என்ற வகையில் அடைவதா? இல்லாவிட்டால் இந்த நிலையிலிருந்து விலகிச் சென்று ஓரிரு வருடங்களுக்கு முன்பு இருந்ததைப் போல வங்குரோத்து நிலையை அடைவதா? என்பதை முடிவு செய்ய வேண்டும்.

நரகத்தில் மீண்டும் விழ வேண்டுமா? இல்லாவிட்டால் தற்போதை பாதையில் சுவர்க்கத்தை சென்றடைவதா? தற்போதைய பாதையைத் தவிர வேறு வழிமுறைகள் எவையும் இல்லை. நாம் இதுவரையில் அடைந்திருக்கும் வெற்றிகள் அதனை உறுதி செய்துள்ளன. அதனால் இதே வழியில் முன்னேறிச் செல்வதற்கான சட்ட திட்டங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

அதே நோக்கில் பொருளாதார மறுசீரமைப்புச் சட்டமூலத்தை விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்போம்.

இவை அனைத்தையும் பிரசித்தமாகும் நோக்கில் செய்யவில்லை. பல அரசியல் குழுக்கள் பிரசித்தமாவதற்காக கற்பனைக் கதைகளைச் சொல்கிறார்கள். கனவுக் கோட்டைகளையும் கட்டுகின்றனர். அவர்களுக்கு நாட்டின் யதார்த்தமான நிலைமை புரியவில்லை. அதிகாரத்திற்காக முட்டிமோதிக்கொள்கிறார்கள். அதிகாரத்திற்காகப் பொய் சொல்கிறார்கள்.

ஆனால் நான் ஒரு போதும் அதிகாரத்திற்காகப் பொய் சொல்லவில்லை. எனது எதிர்காலத்திற்காகவும் நான் பணியாற்றவில்லை. நாட்டின் எதிர்காலத்திற்காகவே செயற்படுகிறேன். அதனால் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ளும் முனைப்புடன் செயற்டவில்லை. நாட்டை மீளக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே எனது நோக்கமாகும்.

எமது திட்டங்கள் சமூகத்தின் ஒவ்வொரு தனி நபருக்கும் நெருக்கடியை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கலாம். அதனை நாம் உணர்ந்துள்ளோம். ஆனால் தனித்தனியே ஒவ்வொரு நபரினதும் பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பது சரியான முறையாக அமையாது. அதனால் ஒருபோதும் நிலையான தீர்வை அடைய முடியாது. ஒட்டுமொத்த நாட்டையும் கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும். வலுப்பெறும் பொருளாதாரத்தின் பலன்களை அனைவருக்கும் பெற்றுக் கொடுக்கவே எதிர்பார்க்கிறோம்.

அதற்காக பேராசிரியர் ஹேன்பிட்டகெதர ஞானவாச தேரர் 1983 எழுதி வெளியிட்ட “எமக்கு பௌத்த ஆட்சி முறை அவசியமாவது ஏன்” என்ற நூலில் குறிப்பிட்டிருக்கும் ஒரு விடயத்தை மேற்கோள் காட்ட விரும்புகிறேன்.

“தனிநபர் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயற்சிப்பதால் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு கிட்டாது. மாறாக நெருக்கடி மேலும் வலுவடைந்து அதர்மம், மோசடி அதிகரித்து, அமைதியும் சமாதானமும் நலிந்து போகும்” என புத்த பெருமானின் போதனையில் கூறியுள்ளார். பொதுவான காரணத்தை அறிந்து தீர்வை வழங்க வேண்டியதன் அவசியத்தையை பௌத்த தர்மம் போதிக்கிறது. அதனால் நாம் அனைவரும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் நன்மை பயக்கும் வகையிலான தீர்வுக்குச் செல்வோம்.

இந்த சரியான பயணத்தில் இணைந்துகொள்ள ஒன்றுபடுமாறு சபையில் இருக்கும் அனைவரிடமும் மக்களிடமும் கேட்டுக்கொள்கின்றோம்.” – என்றார்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சட்டமுறையற்று வரும் சட்டங்கள்

மனிதன் மனித சமூகமாக வாழ்வதற்குச் சட்டங்கள் முக்கியம்.

அமைதி,சமாதானம்,சமரசம், புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு, மனிதாபிமானம், சமூக ஐக்கியம் போன்றவை மிக்க சமுதாய மொன்றை கட்டுப்பாட்டுடன் பேணுவதற்கு சட்டங்கள் அத்தியாவசியமானவை.

மாறிவரும் உலகில் நமது பொருளாதார, வாழ்க்கை முறை, தொழில்நுட்பம், விழும்பியங்கள் எல்லாமும் கூட மாறிக்கொண்டுதான் இருக்கின்றன.

இத்தகைய சமுதாய மாற்றங்களின் தேவை கருதி சட்டங்களும் கூட காலத்துக்கு காலம் மாற வேண்டிய கட்டாயமும் உள்ளது. அதேபோல புதிய, புதிய தேவைப்பாடுகளை நிறைவு செய்வதற்காகப் புதிய, புதிய சட்டங்களும் யாக்கப்பட வேண்டிய தேவையும் உள்ளது.

ஆயினும், சட்ட உருவாக்கம் சட்டப்படியாக நடக்க வேண்டும். அதுதான் சமூக நீதியை நிலை நிறுத்தும்.

இலங்கைத் தீவில் சட்டத்தை யாக்கும் முறைகள் - ஏற்பாடுகள் - ஒழுங்கு விதிகள் உள்ளன.

ஜனநாயக சோசலிசக் குடியரசாக இலங்கை தன்னை அடையாளப்படுத்திக் கொண்டுள்ளது. அதன் உயர் சட்டமான அரசமைப்பு இந்த நாட்டில் ஜனநாயக முறைமைகளின் கீழ் சட்டத்தை யாக்கும் ஏற்பாடுகள் குறித்து தெளிவாக விதைத்துரைத்திருக்கின்றது. அதற்கு மாறாக சட்டங்கள் உருவாக்கப்பட முடியாது என்பதுதான் ஏற்பாடு. ஒழுங்கு முறையும் கூட.

ஆனால் சட்டத்தை யாக்கும் விடயத்திலும் சட்ட விதிகள் - ஒழுங்கு முறைகள் - மீறப்பட்டு எதேச்சாதிகாரம்தலைவிரித்தாடும் ஒரு புதிய இக்கட்டை நாடு எதிர்கொள்ளும் சூழல் இப்போது ஏற்பட்டுள்ளது.

சட்டத்தை நிறைவேற்றுவது என்பது கிரிக்கெட் ஆட்டத்தில் ஓட்டங்களைக் குவிப்பது போன்று எண்ணிக் கணியமாக முன்னெடுக்கப்படுவதில்லை. ஆனால் நமது எதேச்சாதிகார ஆட்சியாளர்கள் சட்ட உருவாக்கத்தைக் கூட ஓட்ட எண்ணிக் கையைக் குறிக்கும் கணக்கீடாக மாற்றி வருகிறார்கள்.

''நாட்டில் புதிய பொருளாதார மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக கடந்த 14 மாதங்களில் 42 புதிய சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும் 62 சட்டங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற எதிர்பார்க்கிறோம். அவை இம்முறை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட முடியாவிட்டால் அடுத்த நாடாளுமன்றத்தில் முன்வைத்து நிறைவேற்ற வேண்டும்'' - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருக்கிறார்.

எண்ணிக் கணியத்தில் சட்டங்களை நிறைவேற்றித் தள்ளுவது குறித்துதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசுகின்றார்.

ஆனால் அந்தச் சட்டங்கள் சட்ட முறைப்படி - ஒழுங்கு விதிகளுக்கு அமைய - நிறைவேற்றப்படுகின்றனவா என்று அவர் கவலைப்படுபவராகத் தெரியவில்லை.

இலங்கையில் நிறைவேற்றப்படும் சட்டங்கள் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறி, அடக்குமுறை ரகத்தைச் சேர்ந்தவையாக இருக்கின்றன என சில தினங்களுக்கு முன்னர் இலங்கை தொடர்பான தனது அவதானிப்பு அறிக்கையில் காட்டமாக விமர்சித்திருக்கின்றார் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர்.

நிகழ்நிலைக் காப்புச் சட்டம்மூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய வழிகாட்டல்கள் மற்றும் பரிந்துரைகளைப் புறமொதுக்கி - உதாசீனம் செய்து - அந்தச் சட்டமூலம் நிறைவேறி இருக்கின்றது எனத் தான் தோன்றித்தனமாக அதற்குச் சான்றுரைத்திருக்கின்றார் சபாநாயகர்.

அரசமைப்பு கவுன்ஸிலின் கூட்டங்கள் கூட அதற்குரிய சட்ட விதிமுறைகள், ஒழுங்குகளுக்கு மாறாக நடத்தித் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன என அறிவிக்கப்படுகின்றது.

இப்போது இரண்டு புதிய சட்டமூலங்களை வழமைக்கு மாறாக, சட்டமா அதிபரின் பரிந்துரை இல்லாமலேயே, நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் அரசுத் தரப்புக் கொண்டு வந்திருக்கின்றது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சீறியிருக்கின்றார்.

சமூகப் பாதுகாப்பிற்கான பங்களிப்பு நிதி (திருத்தச்) சட்டமூலம், பெறுமதி சேர் வரி (திருத்தச்) சட்டமூலம் ஆகியவையே சட்டமா அதிபரின் பரிந்துரை பெறப்படாமலேயே ஒழுங்குப் பத்திரத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

உயர் நீதிமன்றத்தின் பரிந்துரை மற்றும் வழிகாட்டலையே தூக்கிக் கடாசி விட்டுத் தம்மிஷ்டப்படி நிகழ்நிலைக்காப்புச் சட்டத்துக்கு சான்றளித்து இருக்கின்றார் சபாநாயகர்.

சட்டமா அதிபரின் இணக்கம், பரிந்துரை போன்றவற்றையும் கடாசி விட்டு தம்மிஷ்டப்படி சட்டத்தை நிறைவேற்றும் அடுத்த கட்ட எதேச்சாதிகாரத்துக்கும் ஆளும் தரப்புத் தயாராகிவிட்டது போலும்.

ஆட்சித் தரப்பின் எதேச்சாதிகாரத்தை களைவது என்பது நாய் வாலை நிமிர்த்துவதற்கு ஒப்பானதுதான்.




# யாழ். ஒஸ்மானியா கால்கோள் விழா!

**(யாழ் பரீட் இக்பால்)**

யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியின் 2024 ஆம் ஆண்டுக்கான தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா அதிபர் ஜனாப் என். எம்.சாபி தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணம் எஸ்.எஸ்.பி. ஜகத் விசாந்த், சிறப்பு விருந்தினராக யாழ். முஸ்லிம் உதவும் கரங்கள் தலைவர் ஜனாப்.ஆர்.எம். சிறாஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாடசாலையில் இணைந்து கொண்ட அனைத்து புதிய தரம் ஒன்று மாணவர்க ளுக்கும் யாழ். முஸ்லிம் உதவும் கரங்கள் அமைப்பால் பாதணி, பாடசாலைப் பை மற்றும் ஒரு தொகுதி தைத்த பாடசாலை சீருடை உள்ளிட்ட கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் பாடசாலையின் ஆரம்ப பிரிவு மாணவர்களால் கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.











# கல்முனை ஸாஹிரா பாடசாலைக்கு முதற்கட்டமாக ஐந்து மில்லியன் ரூபா!

**வரவேற்பு நுழைவாயில் நிர்மாணிப்பு, சுற்று மதில் புனரமைப்புக்கு அதாவுல்லா எம்.பி. ஒதுக்கினார்**

(பாறுக் ஷிஹான், ஏ.எம். ஆஷிப்)

தேசிய காங்கிரஸ் தலைவரும், திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினரும், சாய்ந்தமருது பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு தலைவருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா நேற்று முன்தினம் (04) கல்முனை ஸாஹிரா தேசிய பாடசாலைக்குச் சென்றிருந்தார்.

இதன் போது ஸாஹிரா தேசிய பாடசாலை அதிபர் எம்.ஐ.ஜாபீர் பாடசாலையில் செயற்படுத்தப்பட வேண்டிய அபிவிருத்தி திட்ட வரைபுகளுடனான முன்மொழிவை தேசிய காங்கிரஸ் தலைவருக்கு தெளிவுபடுத்தினார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் மூலம் ஸாஹிரா தேசிய பாடசாலையின் 75 ஆவது ஆண்டை முன்னிட்டு கல்லூரியின் பிரதான முகப்பில் வரவேற்பு நுழைவாயில் நிர்மாணிப்பதற்கும், பாடசாலை சுற்று மதில் புனரமைப்பு செய்வதற்கும் முதல் கட்டமாக ஐந்து மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளார்.

இதன் போது சாய்ந்தமருது பிரதேச செயலாளர் ஏ.ஏ. ஆஷிக், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் சாய்ந்தமருது - மாளிகைக்காடு ஜும்ஆ பெரிய பள்ளிவாசல் தலைவர் ஹிபத்துல் கரீம் உள்ளிட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# நுவரெலியா மாவட்டக் காடுகளில் விஷமிகள் மூட்டும் தீயால் நாசம்!

(மஸ்கெலியா )

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக ஏற்பட்டுள்ள கடுமையான வெப்பம் காரணமாக பல இடங்களில் வன பகுதிகளில் விஷமிகள் தீ வைப்பதால் பல ஹெக்டையர் வனப் பகுதி தீயால் எரிந்து நாசமகியுள்ளது.

பொகவந்தலாவ கிவ் தோட்ட கீழ் பிரிவு பகுதியில் உள்ள வன பகுதியில் ஏற்பட்ட தீ பரவலில் சுமார் 2 ஹெக்டையர் வன பகுதி தீயால் நாசமானது.

இதே போல் நார்வூட் மேற்பிரிவில் உள்ள வனப் பகுதியில் ஏற்பட்ட தீ பரவலில் சுமார் 5 ஹெக்டையர் வன பகுதி தீயால் நாசமடைந்தது.

கடந்த முதலாம் திகதி நல்லதண்ணி பொலிஸ் பிரிவில் உள்ள மறே தோட்ட நூக்குவத்தை பிரிவில் டேர்ப்பன்டைன் வன பகுதியில் ஏற்பட்ட தீ பரவலில் தொடர்ந்து 30 ஹெக்டையர் வன பகுதி தீயால் நாசமடைந்து ள்ளது

இந்தப் பகுதியில் கடுமையான வெப்பம் நிலவும் வேலையில் கடும் காற்று வீசுவதால் இந்தத் தீயை அணைக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.





# ஹட்டன் தனியார் பஸ் தரிப்பிடத்தில் கழிவறை நீர் கசிவால் துர் நாற்றம்!

(மஸ்கெலியா)

ஹட்டன் நகர சபைக்கு உரித்தான பஸ் தரிப்பிடத்தில் உள்ள பொது கழிப்பறை பகுதியில் கழிவு நீர் கசிந்து வருகிறது.

இதனால் தனியார் பஸ் தரிப்பிட பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது.

இந்தத் தரிப்பிட பகுதியில் தனியார் பஸ்கள் அதன் சாரதிகள், நடத்துநர்கள், பயணிகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பாதசாரிகள் என பல்வேறு மக்கள் கூடுகின்றனர்.

இந்த கழிவறை மூலம் நாளாந்தம் பல ஆயிரம் ரூபா ஹட்டன் நகர சபைக்கு வருமானம் வந்த வண்ணம் உள்ளது.

இருந்த போதும் இந்தக் கழிவறை கழிவு நீர் கசிவை கட்டுபடுத்த முடியாத நிலையில் ஹட்டன் நகர சபை உள்ளது.

அதன் செயலாளர் மற்றும் சுற்றுச் சூழல் அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பயணிகள் வேண்டுகோள் விடுக் கின்றனர்.

# கம்பஹா, மினுவாங்கொடை, மீரிகம ஆஸ்பத்திரிகளுக்கு விசேட வைத்தியர்கள், தாதியர்களை நியமிக்க இணக்கம்!

கம்பஹா, மினுவாங்கொடை மற்றும் மீரிகம வைத்தியசாலைகளுக்கு அத்தி யாவசிய விசேட வைத்தியர்கள், தாதி யர்கள் மற்றும் கனிஷ்ட ஊழியர்களை உடனடியாக வழங்குவதற்கு மேல் மாகாண ஆளுநரும் சுகாதார அமைச் சரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

மேல்மாகாண ஆளுநர் மார்ஷல் ஒப் தி எயார்போர்ஸ் ரொஷான் குண திலக மற்றும் சுகாதார மற்றும் கைத்தொழில் அமைச்சர் டொக்டர் ரமேஷ் பத்திரன ஆகியோர் கம்பஹா வைத்தியசாலைக்கு 350 மில்லியன் ரூபா செலவில் Cardiac Catheteri zation ஆய்வு கூடத்தை வழங்கி யுள்ளனர்.

அத்துடன் மினுவாங்கொடை வைத் தியசாலையில் சத்திரசிகிச்சை பிரிவுப் பணிகளை கூடிய விரைவில் ஆரம்பித்து வைப்பதற்காகவும் மீரிகம வைத்தி யசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட் டுள்ள மூன்று மாடிக் கட்டடத்தின் நிர்மாணப் பணிகளை துரிதப்படுத்து வதற்கும் ஒப்புக்கொண்டார்கள்.

கம்பஹா, மினுவாங்கொடை மற்றும் மீரிகம வைத்தியசாலைகளில் காணப் படும் குறைபாடுகளை கண்டறியும் நோக்கில் கடந்த வெள்ளிக்கிழமை (01) கண்காணிப்பு விஜயத்தில் ஈடுபட்ட நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க அவர்கள் இந்த உடன்பாட்டை வெளிப்படுத்தினர்.



இந்த மருத்துவமனைகளில் வெளி நோயாளர்கள் பிரிவு, நோயாளர்கள் விடுதி, கிளினிக் வளாகம், ஆய்வு கூடம், அவசர சிகிச்சை பிரிவு, சமையலறை உள்ளிட்ட பிரிவுகள் சிறப்பாக கண் காணிக்கப்பட்டன.

வைத்தியசாலைக்கு மருந்துகளை பெற்றுக்கொள்ளும் முறை, மருந்து தட்டுப்பாடு உள்ளதா, நோயாளர் பரா மரிப்பு சேவைகள் எவ்வாறு மேற்கொள் ளப்படுகின்றன, வைத்தியசாலையில் செயல்படுத்தப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் தற்போதைய நிலை, வைத்தியசாலைகளுக்குத் தேவையான மனித மற்றும் பௌதீக வளங்களின் தேவைகள் என்பன தொடர்பில் சுகாதார அமைச்சர் விசேட கவனம் செலுத்தினார்.

வைத்தியசாலைகளுக்கு கண்காணிப்பு விஜயம் மேற்கொண்ட அமைச்சர், வைத்தியசாலை ஊழியர்க ளுடன் விசேட கலந்துரையாடலில் ஈடு பட்டதுடன், ஊழியர்களின் கடமைகள் மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர் பில் கேட்டறிந்தார்.

மூன்று வைத்தியசாலைகளிலும் சிறப்பு மருத்துவர்கள், தாதியர்கள் மற்றும் கனிஷ்ட ஊழியர்களின் கனிஷ்ட ஊழியர்கள் பற்றாக்குறை உள்ளது .

நாட்டில் உள்ள ஒவ்வொரு வைத்திய சாலையிலும் விசேட வைத்தியர்கள், தாதியர்கள் மற்றும் கனிஷ்ட ஊழி யர்களின் பற்றாக்குறையே பிரதான பிரச்சினை. தேவையான ஆட்சேர்ப்பு களை மேற்கொள்ளும் போது வெற்றி டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்தி ரன தெரிவித்தார்.

இதன்போது அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, புதிய திட்டங்களை ஆரம் பிக்கும் முன்னர் முடிக்கப்படாத அபி விருத்திப் பணிகளுக்கு முன்னுரிமை வழங்குமாறு தெரிவித்தார்.




# சிறந்த பெண் தொழில் முனைவோர் விருது; தேசிய மட்டத்தில் பெற்றுள்ளார் பிஸ்ரியா!

(ஹஸ்பர்)

தேசிய மட்டத்தில் சிறந்த பெண் தொழில் முனைவோருக்கான விருதைத் தம்பலகாமம் பிரதேச செயலர் பிரிவின் முள்ளிப்பொத்தானையை சேர்ந்த எம். ஆர்.எம்.பிஸ்ரியா பெற்றுள்ளார்.

இலங்கை மகளிர் தொழில் துறை மற்றும் வர்த்தக சம்மேளனம் நடத்திய சிறந்த பெண் தொழில் முனைவோருக்கான விருது விழாவில் தேசிய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 பெண் தொழில் முயற்சியாண்மையாளர்களில் கிழக்கு மாகாணத்தில் இருந்து ஒருவராக தெரிவு செய்யப்பட்டார்.

இந்த விருது வழங்கும் விழா கொழும்பில் அண்மையில் இடம்பெற்றது. இதன் போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவால் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி இவரைப் பாராட்டியதுடன் தனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இதில் தம்பலகாமம் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# கொழும்பு கிராமிய வங்கிகளில் மோசடி செய்த என்ட்ரஸ்ட் நிறுவன மீது விசாரணை தாமதம்!

## ஏன் என்று கேள்வி எழுப்பியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ

கொழும்பிலுள்ள 24 கிராமிய வங்கிக் கிளைகளில் 5 ஆயிரத்து 400 லட்சம் ரூபாவை மோசடி செய்த என்ட்ரஸ்ட் நிறுவனம் தொடர்பான விசாரணை ஏன் தாமதமாகிறது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பில் அவர் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்துள்ளவை வருமாறு,

கொழும்பு, அவிசாவளை தேர்தல் தொகுதியின் கிழக்கு ஹேவாகம பிரிவில் பலநோக்கு சேவைகள் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கி 24 கிளைகளில் ஒரு லட்சத்துக்கும் அதிகமான வாடிக்கையாளர்களின் 5 ஆயிரத்து 400 லட்சம் ரூபா வைப்புத் தொகையை என்ட்ரஸ்ட் என்ற நிறுவனம் மோசடி செய்துள்ளது.

இந்த சம்பவம் நடந்து 10 வருடங்கள் கடந்து விட்டன. 2021 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி நிலையியல் கட்டளையின் கீழ் இது தொடர்பாக துறைக்குப் பொறுப்பான அமைச்சரிடம் வினவியபோது அவர் அளித்த பதில் திருப்திகரமானதாக அமையவில்லை. இன்றும் இதற்குத் தீர்வு காணப்படவில்லை.

இந்தப் பிரச்சினை பிரதமருக்கு கூட தெரியும் என்பதுடன், இவ்வாறான நிலையில் என்ட்ரஸ்ட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி தொடர்பில் அரசு நடவடிக்கை எடுக்காமல் இருப்பது பிரச்சினைக்கு உரிய விடயமாகும். ஆகவே, இது தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுத்து வைப்பாளர்களுக்குப் பணத்தை வழங்க வேண்டும்.- என்றார்.



# வீதி சமிக்ஞைகள் இடப்படாத காரணத்தால் அடம்பன் நாற்சந்தியில் தொடரும் விபத்து!

## அருட்பணியாளரது உயிரிழப்பை அடுத்து மக்கள் ஆர்ப்பாட்டம்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் அடம்பன் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அடம்பன் நாற்சந்தியில் அடிக்கடி விபத்துகள் இடம்பெற்று வருகின்றன. வீதி சமிக்ஞை இல்லாத காரணத்தாலேயே இந்தத் விபத்துக்கள் நிழ்ந்து வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் திங்கள்கிழமை (04) அருட்பணியாளர் ஒருவர் இந்த இடத்தில் நிகழ்ந்த விபத்தில் இறந்த சம்பவத்தைக் கண்டித்தும் இந்தப் பகுதியில் வீதிகளை மறித்து மக்கள் போராட்டம் நடத்தினர்.

மன்னார் – அடம்பன் பொலிஸ் பிரிவில் உள்ள அடம்பன் நாற்சந்தியில் திங்கட்கிழமை (04) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் மன்னார் மறை மாவட்டத்தில் சேவை புரிந்து வரும் சலேசியன் சபையைச் சேர்ந்த அருட்தந்தை மரிசால் டிலான் (வயது–34) உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இந்தப் பகுதி மக்கள் அடம்பன் நாற்சந்தியை மறித்து ஒரு சில மணிநேரம் தங்கள் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நாற்சந்தியில் இதுவரைக்கும் 15 இற்கும் மேற்பட்ட விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன என்றும் இதில் மூவர் இறந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நாற்சந்தியில் சரியான வீதி ஒழுங்குகள், சமிக்ஞைகள் காணப்படாமையே அதிகமான விபத்துக்கள் ஏற்பஇடம்பெற்று வருகின்றன என்றும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளின் கவனத்தக்கு கொண்டு செல்லப்பட்டபோதும் இந்த நிலை தொடர்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# திருக்கோணேஸ்வர ஆலயத்தில் நடைபெறும் சிவராத்திரி நிகழ்வு


(நூருல் ஹுதா உமர் )

திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் இடம்பெற்றுவரும் சிவராத்திரி நிகழ்வின் 3 ஆம் நாள் நிகழ்வான நேற்று முன்தினம் (04) தமிழ்நாடு மைலம் பொம்புரம் ஆதீனம் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் விசேட அழைப்பாளராக கலந்துகொண்டு ஆன்மீக சொற்பொழிவை வழங்கினார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஏற்பாட்டில் இவர் இங்கு வரவழைக்ககப்பட்டுள்ளார்.

கிழக்கு ஆளுநரின் ஏற்பாட்டில் கடந்த முதலாம் திகதி முதல் சிவராத்திரி நிகழ்வுகள் திருக்கோணேஸ்வரம் ஆலயத்தில் தொடர்ச்சியாக தினமும் மாலை வேளையில் இடம்பெற்று வருகின்றன.

பெருந்திரளான பக்தர்கள் இந்த நிகழ்வுகளில் கலந்து



கொண்டு வருகின்றனர்.

எதிர்வரும் 08 ஆம் திகதி சிவராத்திரி தினம்வரை இந்த நிகழ்வுகள் தொடர்ச்சியாக இடம்பெறும் என்பதும் குறிப் பிடத்தக்கது.

# மகா சிவராத்திரியை முன்னிட்டு கொடி தினத்துக்கு ஏற்பாடுகள்

மகா சிவராத்திரியை முன்னிட்டு உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை வழமை போன்று இவ்வருடமும் கொடி தினத்தை அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

மகா சிவராத்திரி தினமான நாளை மறுதினம் 8 ஆம் திகதி வெள்ளிக் கிழமை கொழும்பிலும் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப்பகுதி உட்பட இலங்கையின் சகல மாவட்டங்களிலும் உள்ள பெரும்பாலான சைவ ஆல யங்கள், இந்து நிறுவனங்கள், அறநெறிப்பாடசாலைகள் போன்ற வற்றில் கொடி தின வைபவம் இடம் பெறும்.

இதன் பிரதான வைபவம் கொழும்பு, பம்பலப்பிட்டி ஸ்ரீமாணிக்கப்பிள்ளையார் ஆலயத்தில் 8 ஆம் திகதி காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு மாவட்டங்களிலும் கொடி விற்பனை மூலம் கிடைக்கும் நிதியானது அந்தந்த மாவட்டங்களிலுள்ள அற நெறிப்பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாண வர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் பயன்படுத்தப்படுகிறது என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

# மட்டு. புதுமுகத்துவாரம் சப்தரிஷி ஆலயத்தில் சிவராத்திரி நிகழ்வு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு புதுமுகத்துவாரம் சப்தரிஷி காயத்திரி ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை (08) மகா சிவராத்திரி நிகழ்வுகள் சிறப்பாக அனுஷ்டிக்கப்படவுள்ளன என்று சப்த ரிஷி ஆலயச் செயலாளர் த.குண ரெத்தினம் தெரிவித்தார்.

இதன்போது சமுத்திரத் தீர்த்தமானது காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை இடம்பெறும். இதன்போது லிங்கத்துக்கு அபிஷேகம் செய்யப்பட வுள்ளது.

சிவராத்திரி தினத்தை முன்னிட் டுமருத்ஞ்ஜய யாகம் இரவு 10 மணி தொடக்கம் 12 மணிவரை நிகழ்த்தப்பட வுள்ளது.

அத்தோடு முதலாம் ஜாமப்பூஜை கல்லடி நீர்ப்பாசனத் திணைக்கள ஊழியர்களாலும், இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் ஜாமப் பூஜைகள் காயத்திரி குடும்பத்தினராலும் ஒழுங் குபடுத்தப்பட்டுள்ளன.இதனைச் சிறப் பிக்கும் வகையில் மட்டக்களப்பு சைவத் திருநெறி மன்றத் தினரால் திருவாசகம் முற்றோதல் நிகழ்வு அரங்கேற்றம் செய்யப்படவுள்ளது.




# போசாக்கு உணவுப் பொதி வழங்கல்!

(சர்ஜுன் லாபீர்)

அரச சார்பற்ற கிரிசாலிஸ் நிறுவனம் சம்மாந்துறை பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 80 குடும்பங்களுக்குப் போசாக்கு உணவுப் பொதி வழங்கும் 04 ஆம் கட்ட நிகழ்வு நேற்று முன்தினம் (04) சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம் தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் போசாக்கு உணவுப் பொதி வழங்கும் நிகழ்வுக்கு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வுக்கு உதவி பிரதேச செயலாளர் யூ.எம் அஸ்லம், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.எம். நவாஸ், விடயத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ரக்கீபா கிரிசாலிஸ், நிறுவனத்தின் திட்ட உதவியாளர் பி. தசதரா உட்பட பொதுமக்கள் என ப் பலரும் கலந்து கொண்டனர்.



# மனித உரிமை விழிப்புணர்வு கருத்தரங்கு மட்டக்களப்பில்!

(பழுவூரான்)

மட்டக்களப்பில் இளைஞர், யுவதிகளுக்கு மனித உரிமைகள் தொடர்பாக விழிப்புணர்வூட்டும் கருத்தரங்கை கிராமிய அபிவிருத்தித் திட்டமிடல் நிறுவனம், வாழ்வுரிமை மனித உரிமைகள் மையம் மற்றும் மனித உரிமைகள் முதலுதவி மையங்கள் ஆகியன இணைத்து நடத்தின.

கிராமிய அபிவிருத்தித் திட்டமிடல் நிறுவனத்தின் பணிப்பாளர் வி.ரமேஸ் ஆனந்தனின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ மண்டபத்தில் இது இடம் பெற்றது.

இந்த நிகழ்வின் வளவாளராக ரைட் ரூ லைஃப் நிறுவனத்தின் இயக்குனர் சபை உறுப்பினரும் சட்டத்தரணியுமான துலான் தசநாயக்க கலந்து கொண்டார்.

மனித உரிமைகள் மீறல் மற்றும் அரசியல் அமைப்பில் உள்ள மனித உரிமைகள் தொடர்பான சரத்துக்கள் தொடர்பாக இதன் போது விரிவாக தெளிவூட்டியிருந்தார்.

இளைஞர் யுவதிகளின் உரிமைகள் மீறப்படும் போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பான விளக்கங்களும் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் திட்ட இணைப்பாளர் பிரசாத், மட்டக்களப்புக்கான ரைட் ரூ லைஃப் திட்ட இணைப்பாளர் குகதாரணி, கிராமிய அபிவிருத்தித் திட்டமிடல் நிறுவனம், வாழ்வுரிமை மனித உரிமைகள் மையம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.





# உள்ளூர் வளங்களை அழிப்பதற்கு எதிராகப் புங்குடுதீவில் கவனவீர்ப்பு

உள்ளூர் வளங்களை அழிப்பதற்கு எதிரான ப் போராட்டம் ஒன்று புங்குடுதீவு கடற்தொழிலாளர்கள் சங்கத்தினரால் தீவக சிவில் சமூகம் அமைப்பின் ஆதர வில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது .

கடலட்டைப் பண்ணை எனும் பெய ரில் உள்ளூர் மீனவர்களை முற்றாக புறக்கணித்து இலாப நோக்கில் வெளி மாவட்டங்களை சேர்ந்தவர்களுக் கும், தென்னிலங்கையை சேர்ந்தவர்க ளுக்கும் கடலட்டை பண்ணைகள் அமைப்பதற்கு உரிய அனுமதிகளை கடற்தொழில் அமைச்சு வழங்குவதற்கு எதிராகவும் –

பாரம்பரிய மீன்பிடி தொழிலை அழிப்பதற்கு எதிராகவும் –

புங்குடுதீவில் நடைபெற்றுவரும் சட்டவிரோத மண் அகழ்வை உடனடி யாகத் தடுக்கக் கோரியும் –

புங்குடுதீவில் தொடர்ச்சியாக அழிக் கப்பட்டு வரும் கால்நடை வளத்தை பாதுகாக்க கோரியும்–




இந்தக் இந்தக் கவனவீர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் போராட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா , சமூக செயற்பாட்டாளர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி , சட்டத்தரணி க. சுகாஷ் , தீவக சிவில் சமூகம் அமைப்பின் பொருளாளர் கருணாகரன் குணாளன் , வேலணை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் கருணாகரன் நாவலன் , ஊர்காவற் துறை பிரதேச சபை உறுப்பினர் கே. ஞானேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

யாழ். மாவட்ட அரச அதிபர் மற்றும் தீவகம் தெற்கு பிரதேச செயலாளர் ஆகியோருக்கு இதன்போது மகஜர் கையளிக்கப்பட்டது.



# காலாவதியான பொருளை விற்பனைக்கு காட்சியில் வைத்திருந்தோருக்கு அபராதம்

யாழ். சாவகச்சேரி நகர் மற்றும் மீசாலை ஆகிய பகுதிகளில் காலாவதியான பானம், சோடா விற்பனைக்காக காட்சிப்படுத்தி வைத்திருந்த வர்த்தகர்களுக்கு தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகர சபைக்கு உட்பட்ட சாவகச்சேரி நகரம் மற்றும் மீசாலை ஆகிய பிரதேசங்களில் கடந்த வாரம் பொது சுகாதார பரிசோதகர் மேற்கொண்ட விசேட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கையில் , உணவகம் மற்றும் வர்த்தக நிலையம் ஆகியவற்றில் விற்பனைக்காக காட்சிப்படுத்தியிருந்த காலாவதியான சோடா மற்றும் காலாவதியான பானங்கள் என்பன மீட்கப்பட்டிருந்தன.




அதனை அடுத்து வர்த்தகர்களுக்கு எதிராகச் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. இந்த நிலையில் வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மன்றில் முன்னிலையான வர்த்தகர்கள் விசாரணையின்போது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து , அவர்களை கடுமையாக எச்சரித்த மன்று , காலாவதியான பானத்தை வைத்திருந்த உணவகத் துக்கு 20 ஆயிரம் ரூபாவையும், காலாவதியான சோடா வைத்திருந்த வர்த்தக நிலையத்திற்கு 8 ஆயிரம் ரூபாவையும் தண்டமாக விதித்தது. காலா வதியான பொருள்களை அழிக்க உத்தரவிடப்பட்டது.

# தரம் பிரித்து வழங்கக் கூடிய குப்பைத்தொட்டிகள் அன்பளிப்பு

பருத்தித்துறை நகரசபை நிதியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட தரம் பிரித்து வழங்கக் கூடிய குப்பைத்தொட்டிகள் பாடசாலைகள், முன்பள்ளிகள் என்ப வற்றுக்கு நகரசபை செயலாளரால் வழங்கிவைக்கப்பட்டன.

இவற்றில் ஒன்று பருத்தித்துறை நீதி மன்றத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஹாட்லிக்கல்லூரி, வட இந்து ஆரம்ப பாடசாலை, ஆத்தியடி முன் பள்ளி, அரும் புகள் முன்பள்ளி ஆகிய வற்றுக்கும் வழங்கப்பட்டன.





# வெளிநாடுகளில் 476 இலங்கையர்கள் 2023 இல் பல காரணங்களால் மரணம்

2023 ஆம் ஆண்டில் பல்வேறு காரணங்களால் வெளிநாடுகளில் 476 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளனர் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

பணியகத்தின் தகவல் அதிகாரி ஜி.ஜி. வீரசேகர வழங்கிய தகவலில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு வெளிநாட்டில் பணிபுரியும் போது உயிரிழந்த 476 தொழிலாளர்களில் 366 பேர் இயற்கை மரணம் அடைந்துள்ளனர். மற்றும் 36 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். மேலும் 34 பேர் சாலை விபத்துகளாலும், 27 தொழிலாளர்கள் ஏனைய விபத்து களாலும் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் 10 பேர் கொலைகள் மற்றும் மூன்று பேர் வேறு காரணங்களால் இறந்துள்ளனர் என்று பணியகம் தெரிவித்துள்ளது. 2022 இல் 304 பேரும், 2021 இல் 295 பேரும், 2020 இல் 173 பேரும், 2019 இல் 224 பேரும் உயிரிழந்துள்ளனர் என்று அந்தத் தகவல் தெரிவிக்கிறது.




# வான் சாகசம் - 2024 இன்று யாழில் ஆரம்பம்

(பிரபாகரன் டிலக்சன், எஸ். நிதர்ஷன்)

இலங்கை விமானப்படையின் 73 ஆவது வருட நிறைவை முன்னிட்டு "வான் சாகசம் - 2024" கண்காட்சி நிகழ்வுகள் யாழ்ப்பாணம் - முற்றவெளி மைதானத்தில் இன்று ஆரம்பமாகின.

'நட்பின் சிறகுகள்' எனும் தொனிப் பொருளில் யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இன்று ஆரம்பமாகிய இந்தக் கண்காட்சி எதிர்வரும் 10 ஆம் திகதிவரை காலை 10 மணி முதல் இரவு 11 மணிரை நடைபெறவுள்ளது.

இன்றைய ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைத்தார்.

அதிகமான பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கண்காட்சியை பார்வையிடுவதற்கான வருகை தந்து கொண்டிரெதமையை அவதானிக்க முடிந்தது.

கண்காட்சியில் விமான படை வீரர் களின்சாகசங்கள் இடம்பெற்றமையுடன், ஆளில்லா விமானங்கள், விமானப்படை யின் தளபாடங்கள், ஹெலிக்கொப்டர் கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டுள் ளன.

மேலும் உள்ளூர் உற்பத்தியாளர் களின் கண்காட்சிகளும் இடம்பெற்றன.

பாடசாலை மாணவர்கள் இந்த கண்காட்சியை முற்றிலும் இலவசமாக பார்வையிட முடியும் என்பதுடன் ஏனை யோர் 100 ரூபா கட்டணம் செலுத்தி இந்த கண்காட்சியை பார்வையிட முடியும்.






# பொலிசார் மீது தாக்குதல் மேற்கொண்டு தப்ப முயன்ற மணல் கடத்தல்காரர்கள்

## இன்று காலை நுணாவில் பகுதியில் சம்பவம்

பொலிசார் மீது தாக்குதல் மேற் கொண்டு தப்பிச் செல்ல முயன்ற மணல் கடத்தல்காரர்கள் இருவர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

டிப்பர் வாகனமும், மோட்டார்ச் சைக் கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

இன்று புதன்கிழமை அதிகாலை 2.00 மணியளவில் நுணாவில் பகுதி யில் இருந்து சாவகச்சேரி நோக்கி வந்து கொண்டிருந்த டிப்பர் வாகனத்தை போக்குவரத்துக் கடமையில் இருந்த சாவகச்சேரி பொலிஸார் மறித்துள்ளனர்.

எனினும் அந்த டிப்பர் நிறுத்தாமல் சென்றுள்ளது.

இதனையடுத்து டிப்பர் வாகனத்தை துரத்திச் சென்ற பொலிஸார் சாவகச்சேரி சுற்றுவட்டத்தில் வைத்து அதனை மறித்துள்ளனர்.

இதன்போது டிப்பர் சாரதி மற்றும் டிப்பர் வாகனத்துக்குப் பக்கத்தில் மோட் டார் சைக்கிளில் வந்த இருவர் உட்பட மூவரும் இணைந்து பொலிஸார் மீது இரும்புக் கம்பிகளால் தாக் குதல் நடத்த முற்பட்டுள்ளனர்.

இதன்போது போது நகரப் பகுதியில் கடமை இருந்து பொலிஸார் சுற்றி வளைத்துத் தாக்குத நடத்திய மணல் கடத்தல்காரர்கள் இருவரை கைது செய்தனர்.

எனினும் டிப்பர் வாகனத்திற்கு முன் பாக வழிகாட்டி வந்த ஒருவர் மோட்டார் சைக்கிளை கைவிட்டு விட்டுத் தப்பி சென்றுள்ளார். இணையடுத்து மணல் கடத்தி வரப்பட்ட டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட் டுள்ளன. தப்பிச் சென்றவரை கைது செய்ய சாவகச்சேரி பொலிஸ ார் நடவ டிக்கை மேற்கொண்டுள்ளனர்.



# ‘சிறுவர்களின் வாழ்வை மேம்படுத்துவோம்’ மட்டக்களப்பில் அஞ்சல் ஓட்ட நிகழ்வுகள்!

(பழுவூரான்)

‘சிறுவர்களின் ஆரோக்கியமான வாழ்வை மேம்படுத்துவோம்’ எனும் தொனிப்பொருளில் அஞ்சல் ஓட்ட கானிவேல் 2024 நிகழ்வு மட்டக்களப்பில் ஞாயிற்றுக்கிழமை (03) இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மெய்வல்லுனர் சங்கத்தின் ஏற்பாட்டில் கழகத்தின் தலைவரும் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தருமான வீ.ஈஸ்பரன் தலைமையில் மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களில் இருந்து 18 பாடசாலைகளைச் சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் அஞ்சலோட்ட வீரர்கள் பங்குபற்றினர்.

அஞ்சலோட்டப் போட்டியானது பாடசாலை மாணவர்களுக்கிடையில் நான்கு பிரிவுகளாகவும், கழகங்களுக்கு இடையில் திறந்த மட்டப் போட்டியாகவும் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி.சுதர்ஷினி ஸ்ரீ காந்த் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வெற்றி பெற்ற வீரர்களுக்கு சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களை வழங்கி வைத்துள்ளார்.

நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு வலயக் கல்வி அலுவலகத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) வீ.லவகுமார், செரி நிறுவனத்தின் இலங்கைக்கான தேசிய இயக்குனர் தர்சன், கிழக்கு பல்கலைக்கழகத்தின் உதவி கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) திவாகர், சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் உடற்கல்வித்துறை போதனாசிரியர் திருமதி.மிருணாளினி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

வெற்றி பெற்ற போட்டியாளர்களுக்கு சான்றிதழ்களும் பதக்கங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன. போட்டிகளில் பங்குபற்றிய அனைத்துப் போட்டியாளர்களுக்கும் இதன்போது அதிதிகளால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.








# இலங்கைக்கு கடத்த இருந்த போதைப் பொருள் பறிமுதல்

## 108 கோடி இந்திய ரூபாய் பெறுமதி

இலங்கைக்கு கடத்துவதற்கு தயார்படுத்தப்பட்டிருந்த 108 கோடி இந்திய ரூபாய் பெறுமதியான போதைப் பொருளை அந்த நாட்டு பாதுகாப்பு தரப்பினர் கைப்பற்றியுள்ளனர்.

தமிழகத்தின் தனுஸ்கோடி கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது மேற்படி போதைப் பொருள் தொகை மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது 99 கிலோகிராம் ஹஷிஸ் ரக போதைப் பொருள் மீட்கப்பட்டதாக இந்திய மத்திய வருவாய் புலனாய்வு பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேக நபர் உள்ளிட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

111 சிறிய பைக்கட்டுக்களாக பொதி செய்யப்பட்ட 5 பொதிகள் இதன்போது மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் இந்திய கடலோர காவல்படையினரும்இ மத்திய வருவாய் புலனாய்வு பிரிவினரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்த போதைப்பொருள் பறிமுதல் குறித்து சென்னை மண்டல மத்திய வருவாய் புலனாய்வு பிரிவினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

'மன்னார் வளைகுடா கடல் பகுதி வழியாக இலங்கை நோக்கி சென்று கொண்டிருந்த நாட்டுப்படகை தடுத்து நிறுத்தி சோதனை செய்ததில் 5 சாக்குப்பைகளில் 111 பொதிகளில் இருந்த இருந்த 99 கிலோ போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டது.' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தனுஷ்கோடி கடல் வழியாக இலங்கைக்கு கடத்த முயன்ற சுமார் 108 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் ஒட்டுமொத்த உளவு பிரிவு பொலிஸ் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இராமேசுவரம்இ தனுஷ்கோடி உள்ளிட்ட இராமநாதபுரம் மாவட்ட கடல் வழியாக இலங்கைக்கு கடத்த முயன்ற அதிகளவு பெறுமதியான போதைப் பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ள சந்தர்ப்பம் இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

# வேட்பாளர் பட்டியலுடன் டில்லி செல்கிறோம்; பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தகவல்

"கட்சியின் மூத்த உறுப்பினர்கள் அனைவரும் இன்று டில்லி செல்கிறோம். பா.ஜ.க. தேசிய தலைவர், உள்துறை அமைச்சர் ஆகியோரை சந்தித்து தமிழகத்தின் 39 தொகுதிகளில் யார் போட்டியிடுவது என்ற பட்டியலை வழங்கி அது குறித்து ஆலோசிக்க உள்ளோம்."

– இவ்வாறு பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

மக்களவைத் தேர்தல் வரவுள்ளதை அடுத்து வேட்பாளர்கள் தேர்வு செய்வது குறித்து நேற்று தமிழகம் முழுவதும் தொகுதி வாரியாக நிர்வாகிகளிடம் பா.ஜ.க. ஆலோசித்தது.

இந்த நிலையில் இன்று பா.ஜ.க. மூத்த தலைவர்கள் சென்னையில் உள்ள கட்சித் தலைமையகத்தில் ஆலோசனை நடத்தினர். ஆலோசனைக்கு பின் செய்தியாளர்களைச் சந்தித்த பா.ஜ.க மாநிலத் தலைவர் அண்ணாமலை,



"தமிழகத்தின் 39 தொகுதிகளுக்கும் பா.ஜ.க. தலைவர்கள் சென்று தொண்டர்களின் ஆலோசனைகளைப் பெற்றுள்ளனர். பா.ஜ.க. தொண்டர்கள் எழுச்சியோடு யார் போட்டியிட வேண்டும் என்று கூறியுள்ளனர். அதனை பா.ஜ.க. தேசிய தலைவர்கள் மத்தியில் எடுத்துக் கூறுவோம். எங்கள் பட்டியலில் பெண் வேட்பாளர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. நாங்கள் டில்லியில் இருந்து திரும்பும்போது தமிழக பா.ஜ.க. வேட்பாளர்கள் பட்டியல் வெளியாகலாம்" – என்றார்.

# கொல்கத்தாவில் நீருக்கு அடியிலான ரயிலில் மாணவர்களுடன் பயணித்தார் பிரதமர் மோடி




இந்தியாவில் முதன்முதலாக நீருக்கு அடியில் செல்லும் மெட்ரோ ரயில் சேவையை மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் பிரதமர் நரேந்திர மோடி இன்று தொடங்கி வைத்தார்.

இதற்கான நிகழ்ச்சியில் மேற்கு வங்க ஆளுநர் சி.வி. ஆனந்த போஸ், அம்மாநில பா.ஜ.க. எம்.எல்.ஏவும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான சுவேந்து அதிகாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில், மெட்ரோ ரயில் சேவையை கொடி அசைத்து தொடங்கி வைத்த பிரதமர் மோடி, பல திட்டங்களை தொடங்கிவைத்தும் ,அடிக்கல் நாட்டியும் சிறப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து பாடசாலை மாணவர்களோடு சேர்ந்து மெட்ரோ ரயிலில் பயணித்தார். அப்போது, மாணவர்களோடு பிரதமர் மோடி கலந்துரையாடினார்.

இந்தியாவின் உள்கட்டமைப்பு வளர்ச்சியில் புதிய மைல்கல்லாக கொல்கத்தாவில் நதிக்கு அடியில் மெட்ரோ ரயில் பாதை கட்டமைக்கப்பட்டுள்ளது. அந்த வழித்தடத்தில் மெட்ரோ ரயில் சேவையை பிரதமர் மோடி இன்று தொடங்கி வைத்தார். ஹவுரா மைதானம் முதல் எஸ்.பிளனேடு மெட்ரோ பிரிவு வரையில் நீருக்கு அடியில் மெட்ரோ ரயில் பாதை கட்டமைக்கப்பட்டுள்ளது. இது இந்தியாவின் தொழில்நுட்ப கட்டுமான வல்லமையை உலகுக்கு பறைசாற்றும் வகையில் இருக்கும்.

நீருக்கு அடியிலான இந்த மெட்ரோ ரயில் சேவை மூலம், கொல்கத்தா நகரத்தின் இரண்டு பரபரப்பான பகுதிகளை விரைவாக சென்றடைய முடியும். கவி சுபாஷ் – ஹேமந்த் முகோபாத்யாயா மெட்ரோ பிரிவு, ஜோகா – எஸ்பிளனேடு பாதையின் ஒரு பகுதியான தரதலா – மஜர்ஹெட் மெட்ரோ பிரிவு ரயில் சேவையையும் பிரதமர்மோடி இன்று தொடங்கி வைத்தார்.

இது, நகர்ப்புற போக்குவரத்தை மாற்றி அமைப்பதற்கான முக்கிய திருப்புமுனையாக இருக்கும். நகரங்களுக்கு இடையிலான இணைப்பை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும். இந்தியா முழுவதும் நிலையான மற்றும் வலுவான போக்குவரத்து இணைப்பை உருவாக்குவதற்காக விரிவான முன் முயற்சியில் மத்திய அரசு ஈடுபட்டுள்ளது. அதன் ஒரு பகுதியாக, நீருக்கு அடியில் மெட்ரோ ரயில் வழித்தடம் உருவாக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் மோடி பொய்களைச் சொல்கிறார்: தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிக்கை

“வெள்ள நிவாரணமாக 37,000 கோடி ரூபா நிதி கேட்டோம். அதற்கு ஒரு ரூபாவையாவது ஒதுக்கி, தமிழக மக்களுக்கு உதவி செய்தாரா பிரதமர்? இப்படியா பொய்களைச் சொல்வது?”

– இவ்வாறு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“மகளிர் விடியல் பயணம், புதுமைப் பெண், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், இல்லம் தேடிக் கல்வி, மக்களைத் தேடி மருத்துவம், ஒலிம்பிக் தேடல், நான் முதல்வன், உங்கள் தொகுதியில் முதலமைச்சர், முதல்வரின் முகவரி, கள ஆய்வில் முதலமைச்சர் திட்டம் என இப்படி, தமிழகத்தில் வாழும் ஒவ்வொரு குடும்பமும் பயனடையும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வெற்றி கண்டுள்ளது திராவிட மாதிரி அரசு.

எங்களைச் சிலர் குடும்ப ஆட்சி என்று சொல்கிறார்கள். ஆம் இது குடும்ப ஆட்சிதான். தமிழகத்தின் ஒவ்வொரு குடும்பத்தையும் கை தூக்கிவிடும் ஆட்சி இது. ஆட்சிக்கு வந்த ஓராண்டு காலத்தில் ஏராளமான மனுக்கள் என்னைத் தேடித் தேடி வழங்கப்பட்டன. அப்படி வழங்கப்பட்ட கோரிக்கைகளை அரசு நிறைவேற்றிக் கொடுத்த காரணத்தால், இப்போது நான் செல்லும் பயணங்களில் மக்களின் கைகளில் மனுக்களைக் காண முடியவில்லை. மாறாக, அவர்களது முகங்களில் மகிழ்ச்சியைக் காண்கிறேன்.



சில நாள்களுக்கு முன்னால் சென்னைக்கு வந்து பேசிய பிரதமர் மோடி, மாநில அரசுக்குத் தராமல் மக்களுக்கு நேரடியாக நிதி வழங்கி வருவதாக அப்பட்டமான ஒரு பொய்யைச் சொல்லி விட்டுச் சென்றுள்ளார். எந்த மக்களுக்குக் கொடுத்தார் என்பதைச் சொல்லி இருந்தால் அந்த மக்களுக்குக் கிடைத்ததா என்று கேட்கலாம். இரண்டு மாபெரும் இயற்கை பேரிடரை எட்டு மாவட்டத்து மக்கள் சந்தித்தார்கள். இதற்காக 37 ஆயிரம் கோடி ரூபாய் நிதி கேட்டோம். அதற்கு 1ரூபாயையாவது ஒதுக்கி, தமிழக மக்களுக்கு உதவி செய்தாரா பிரதமர்? இப்படியா பொய்களைச் சொல்வது?

மத்திய அரசிடம் இருந்து நிதி வரவில்லை என்றாலும் இந்த எட்டு மாவட்ட மக்களுக்காக, மாநில பேரிடர் நிதி மற்றும்அரசுத்துறைகளில்இருந்து 3406.77 கோடி ரூபாய் அளவுக்கு நிதி வழங்கியும், நிவாரணப் பணிகளைச் செய்தும் மக்கள் நலம் காத்து வரும் அரசுதான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அரசு. உங்கள் ஒவ்வொருவர் நலனைக் காக்கவே நான் உழைக்கிறேன் என்பதன் மற்றுமோர் அடையாளமாகத்தான் இந்த ‘நீங்கள் நலமா’ திட்டத்தைத் தொடங்கி வைத்துள்ளேன்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.



## போரிட நிர்பந்திக்கப்படும் எங்களை காப்பாற்றுங்கள்:

# ரஷ்யாவிலுள்ள இந்தியர்கள் மத்திய அரசிடம் கோரிக்கை

"ரஷ்யாவுக்கு சுற்றுலா சென்ற எங்களை ஏமாற்றி ரஷ்ய இராணுவத்தில் சேர்த்துள்ளனர். தற்பொழுது, உக்ரைனுக்கு எதிராக போரிட நிர்ப்பந்திக்கப்படுகின்றோம். எங்களை காப்பாற்றுங்கள்: "

– இவ்வாறு பஞ்சாப் மற்றும் ஹறியாணாவைச் சேர்ந்த 7 இளைஞர்கள் அவசர வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ளவர்கள் ககன்தீப் சிங் (வயது 24), லவ்பரீத் சிங் (வயது 24), நரேன் சிங் (வயது 22), குர்பிரீத் சிங் (வயது 21), குர்பிரீத் சிங் (வயது 23), ஹர்ஷ் குமார் (வயது 20), மற்றும் அபிஷேக் குமார் (வயது 21) என்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஐந்து பேர் பஞ்சாப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் மற்ற இருவர் ஹறியாணாவைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்படுகிறது. பாதிக்கப்பட்டவர்கள் இந்த வாரத்தில் இரண்டு காணொலிகளை வெளியிட்டு இந்திய அரசிடம் உதவி கோரியுள்ளனர்.

சமூக வலைதளமான எக்ஸில் பரவி வரும் 105 நொடிகள் கொண்ட இரண்டாவது வீடியோவில் இளைஞர்கள் குழு, ரஷ்யாவின் குளிர்கால ராணுவ உடையில் இருப்பதைக் காண முடிகிறது. மங்கலான ஒளியிருக்கும் பூட்டப்பட்ட அறையின் ஒரு மூலையில் அவர்கள் இருப்பது தெரிகிறது. ஆறு பேர் ஒன்றாக நிற்க ஹறியாணாவின் கர்னாலைச் சேர்ந்த ஹறிஸ் குமார் எனக் கூறப்படும் நபர் அவர்களின் அவல நிலையைக்கூறி அரசின் உதவியைக் கோருகிறார்.

இந்த இளைஞர்கள் புத்தாண்டை கொண்டாடுவதற்காக கடந்த ஆண்டு டிசம்பர் 27 ஆம் திகதி ரஷ்யா சென்றுள்ளனர். அவர்களிடம் ரஷ்ய பயணத்துக்கான 90 நாள் சுற்றுலா விசா இருந்தது. அதற்கு பின்னர் அங்கிருந்து அவர்கள் அருகில் உள்ள பெலாரஸ் சென்றுள்ளனர். அங்கு அவர்கள் ஏமாற்றப்பட்டு ரஷ்ய இராணுவத்தில் உதவியாளர்களாக சேர நிர்பந்திக்கப்பட்டுத்தப்பட்டுள்ளனர்.

ரஷ்ய இராணுவத்தில் சேர அவர்களை பொலிஸார் நிர்பந்தித்தனர் எனவும் இல்லையெனில் பத்துவருடம் சிறை தண்டனை அனுபவிக்க வேண்டி இருக்கும் எனக் கூறியிருந்தனர் என்றும் இளைஞர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

கடந்த 03 ஆம் திகதி அவர்கள் வெளியிட்டுள்ள காணொலியில்,

"நாங்கள் இராணுவத்தில் உதவியாளர்களாக மட்டும் பணியாற்றினால் போதும் என்று கூறப்பட்டது. ஆனால் அவர்கள் எங்களை ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்து பயிற்சிகளில் ஈடுபடுத்தி உக்ரைன் போருக்கு அனுப்ப தீர்மானித்துள்ளனர். அவர்கள் எங்களைப் பட்டினி போட்டனர், எங்களுடைய போன்களை பறித்துக்கொண்டனர்.

ஒரு வருடத்துக்கு பின்னர் தான் நாங்கள் இங்கிருந்து செல்ல முடியும் என்று ரஷ்ய இராணுவத்தினர் எங்களிடம் தெரிவித்தனர். உக்ரைன் போரில் வெற்றி பெற தங்களுக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டனர். அவர்களுக்கு எப்படி உதவ முடியும் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அதைச் செய்யவில்லையென்றால் நாங்கள் உயிருடன் இருக்க முடியாது" என்று தெரிவித்துள்ளனர்.


# பாகிஸ்தானின் பிரதமராகப் பதவியேற்றுள்ள ஷெபாஸ் ஷெரீபுக்கு பிரதமர் மோடி வாழ்த்து

பாகிஸ்தானின் 24 ஆவது பிரதமராக பொறுப்பேற்றுள்ள ஷெபாஸ் ஷெரீபுக்கு பிரதமர் நரேந்திர மோடி வாழ்த்துத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் முஸ்லிம் – நவாஸ் கட்சித் தலைவரான ஷெபாஸ் ஷெரீப் பாகிஸ்தான் நாட்டின் புதிய பிரதமராக கடந்த ஞாயிற்றுக்கிழமை தேர்ந்தெடுக்கப்பட்டார். அதைத் தொடர்ந்து திங்கள்கிழமை அவர் பதவி ஏற்றார்.

இதுகுறித்து பிரதமர் மோடி தனது எக்ஸ் பக்கத்தில் நேற்று வெளியிட்ட பதிவில் "பாகிஸ்தான் பிரதமராகப் பதவியேற்றுள்ள ஷெபாஸ் ஷெரீபுக்கு வாழ்த்துகள்" என கூறப்பட்டுள்ளது.





# உக்ரைனில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் ரஷ்யாவின் இரண்டு முக்கிய தளபதிகளுக்கு பிடியாணை



உக்ரைனில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பாக ரஷ்ய உயர்மட்ட தளபதிகளுக்கு சர்வ தேச குற்றவியல் நீதிமன்றம் (ஐ.சி.சி.) பிடியாணை பிறப்பித்துள்ளது.

இராணுவ லெப்டினன்ட் ஜெனரல் செர்ஜி கோபிலாஷ் மற்றும் கடற்படை அட்மிரல் விக்டர் சோகோலோவ் ஆகிய தளபதிகளே ஐ.சி.சியால் பெயரிடப்பட்ட இருவர் ஆவர்.

உக்ரைன் போர் தொடர்பான ரஷ்ய அதிகாரிகளுக்கான இரண்டாவது சுற்று பிடியாணை இதுவாகும். முதலாவது ஜனாதிபதி விளாடிமிர் புடின் மற்றும் அவரது குழந்தைகள் உரிமைத் தூது வர் ஆகியோராவர்.

ரஷ்யா ஐ.சி.சி.யை அங்கீகரிக்க வில்லை, இதனால் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள அவர்கள் நாடு கடத்தப்பட வாய்ப்பில்லை.

உக்ரைனிய மின்சார உள்கட்டமைப் புக்கு எதிராக அவர்களின் கட்டளையின் கீழ் உள்ள படைகளால் நடத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதல்களுக்கு இரண்டு சந்தேக நபர்களும் பொறுப்பு என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பதால் சமீபத்திய பிடியாணைகள் இருப்பதாக ஐ.சி.சி. கூறியது.

குற்றம் சாட்டப்பட்ட குற்றங்கள் ஒக் டோபர் 2022 மற்றும் மார்ச் 2023 இற்கு இடையில் இடம்பெற்றுள்ளன என ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல்கள் பொதுமக்க ளுக்கு தீங்கு விளைவிப்பதாகவும், அது மிகைப்படுத்தப்பட்ட சேதத்தை ஏற்படுத் தியதாகவும் நீதிமன்றம் கூறியது.

இரண்டு பேரும் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தும் போர்க்குற்றத்திற்கு பொறுப்பானவர்கள் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளனர் என்று நீதிமன்றம் கூறியது.

கோபிலாஷ் (வயது 58) குற்றஞ்சாட்டப் பட்ட நேரத்தில் ரஷ்ய விமானப்படையின் நீண்ட தூர விமானப் போக்குவரத்துத் தளபதியாக இருந்தார். 61 வயதான சோகோலோவ், ரஷ்ய கடற்படையில் அட்மிரல் ஆவார், அவர் குற்றச்சாட்டுகள் தொடர்புடைய காலத்தில் கருங்கடல் கடற்படைக்கு கட்டளையிட்டார் என்று ஐ.சி.சி. தெரிவித்துள்ளது.

# ரஷ்யாவின் ரோந்து கப்பலை தகர்த்தது உக்ரைன் கடல்படை

உக்ரைன் கடல்படையின் சிறப்பு பிரிவான குரூப் 13, ரஷ்யாவின் புதிய ரோந்து கப்பலை கடுமையாக தாக்கி சேதப்படுத்தியுள்ளதாக தெரிவித் துள்ளது.

கருங்கடல் பகுதியில் ரஷ்யாவின் ரோந்து கப்பல் நிறுத்தப்பட்டு உக்ரை னுக்கு அச்சுறுத்தலாக இருந்து வந்த நிலையில், ஜனாதிபதி புடினின் புதிய ரோந்து கப்பலை உக்ரைன் தாக்கி அழித்து உள்ளது.

இதுதொடர்பாக உக்ரைன் நாட்டு பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்தியில்,

ரஷ்யாவின் மற்றொரு கப்பல், நீர்மூழ்கி கப்பலாக மேம்படுத்தப்பட்டு உள்ளது. எனினும், உக்ரைனின் சிறப்பு பிரிவான குரூப் 13, ரஷ்யா வின் ரோந்து கப்பலை தாக்கியது.

இதில், 538 கோடி ரூபா மதிப்பி லான செர்கெய் கொடோவ் என்ற அந்த கப்பலை, உக்ரைன் கடல்படையின் ஆளில்லா விமானங்களான மகுரா வி 5 தாக்கின.

இதில், கப்பலின் விளிம்பு பகுதி, வலது மற்றும் இடது புறங்களில் கடுமை யான பாதிப்பு ஏற்பட்டு உள்ளது. இனிமையான நாளின் தொடக்கம். வீரர்களே, சிறந்த பணியை செய்திருக் கிறீர்கள் என தெரிவித்து உள்ளது.

இதேவேளை கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஏழு பேர் கொல்லப் பட்டுள்ளனர். மேலும் அறுவர் காயம டைந்துள்ளனர் என உக்ரைன் புல னாய்வுத்துறை தெரிவித்துள்ளது.

சர்வதேச மூலோபாய ஆய்வுகளின் சிந்தனைக் குழுவின் கூற்றுப்படி, மோத லின் தொடக்கத்திலிருந்து குறைந்தது 13 ரஷ்ய கடற்படைக் கப்பல்கள் அழிக் கப்பட்டுள்ளன அல்லது சேதமடைந் துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம், மற்றொரு ரஷ்ய கப்பலான சீசர் குனிகோவ், யால்டா நகருக்கு தெற்கே ஆளில்லா விமான தாக்குதலில் மூழ்கியது என்பது குறிப் பிடத்தக்கது.





கனடா முரசு
பக்கங்கள் - 3
புதன்கிழமை 06/03/2024

## ஒஸாவா விபத்தில் பெண் ஒருவர் சாவு

ஒன்ராரியோ, மார்ச் 06
ஒஸாவா பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
நேற்று மார்ச் 5ஆம் திகதி C2




# மின்சார, எரிவாயுக் கட்டணங்கள்

# வரவு - செலவுத் திட்டத்தில் உயரும்?

ஒன்ராரியோ,மார்ச்06
மத்திய அரசாங்கத்தினால் முன்வைக்கப்படவுள்ள வரவு - செலவுத் திட்டத்தினால் மின்சாரக் கட்டணங்கள், எரிவாயுக் கட்டணங்கள் என்பன அதிகரிக்கக் கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் வருமான வரியிலிருந்து கழிக்கக்கூடிய கடனுக்கான வட்டித் தொகையை கனடா மாற்றி அமைத்தால், சில தனியார் நிறுவனங்கள் புதிய வரிகளில் மில்லியன் கணக்கான அதிகரிப்பை எதிர்கொள்ளும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வட்டிவீதத்தை அரசாங்கம் கட்டுப்படுத்தினால், அந்த செலவினங்களை வாடிக்கையாளர்கள் மீது சுமத்த வேண்டிய நிலையும் ஏற்படும் என்பதால், பொருளாதாரத்தின் மீதான தாக்கத்தை எதிர்பார்க்க முடியும் என பொருளியலாளர்கள் கூறுகின்றனர்.




# ஒட்டாவா மேயர் அலுவலகம்


# தாக்குதலுக்கு இலக்கானது!

ஒன்ராரியோ, மார்ச்06
ஒட்டாவா மேயரின் அலுவலகம் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

நேற்று மார்ச் 5ஆம் திகதி ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த ஒட்டாவா மேயர் மார்க் சுட்கிளைவ் கடந்த திங்கட்கிழமை இரவில் தமது அலுவலகம் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறியுள்ளார்.

மேயர் அலுவலகத்தில் உள்ள ஊழியர்களின் அறைகளுக்குள் ஊடுருவியர்கள் புகுந்துள்ளனர் என அவர் குறிப்பிட்டார்.

# எட்மண்டன் நகர சபையில் தாக்குதல் பயங்கரவாதச் செயலாக இருக்கலாம்



அல்பேர்ட்டா, மார்ச்06

கடந்த ஜனவரி மாதம் எட்மன்டன் நகர சபையில் நடைபெற்ற தாக்குதல் பயங்கரவாத சம்பவமாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

சம்பவ இடத்திலிருந்து ஆபத்து விளைவிக்கக் கூடிய ஆயுதங்களைப் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

இந்த ஆயுதங்கள் பெரும் எண்ணிக்கையிலான மக்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடியவை எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ஜனவரி 23ஆம் திகதி இடம்பெற்ற இந்த சம்பவத்தின் போது எவரும் காயமடையவில்லை, எனினும், சம்பவம் இடம்பெற்ற போது அரங்கு முழுவதும் மக்கள் இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.



## வயதானோருக்கு இலவசமாக மார்பகப் புற்றுநோய் சோதனை

கியூபெக், மார்ச்06

70-74 வயதுக்குட்பட்டவர்கள் மருத்துவரின் பரிந்துரையின்றி இலவசமாக மார்பகப் புற்றுநோயிற்கான பரிசோதனைகளை செய்ய முடியும் என கியூபெக் மாநிலம் தெரிவித்துள்ளது.

இந்த நிகழ்ச்சி இதுவரை 50-69 வயதுக்குட்பட்டவர்களுக்கு மாத்திரமே செயலில் இருந்தது.

குறிப்பிட்ட பரிசோதனை நிலையத்தில் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இந்தப் பரிசோதனைகளை செய்யக் கூடியதாகவுள்ளது.

70-74 வயதுக்குட்பட்டவர்களை பரிசோதனைக்கான முன்பதிவினை செய்யுமாறு பெப்ரவரி மாதத்தில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## கனடா வங்கியிடம் வட்டி வீதங்களை குறைக்க மாநில முதல்வர் கோரிக்கை



ஒன்ராறியோ, மார்ச்06

கனடா வங்கி தனது வட்டி வீதங்களை குறைக்க வேண்டும் என ஒன்ராறியோ மாநில முதல்வர் டக் போர்ட் தெரிவித்துள்ளார்.

பிரபல சமூக ஊடகமான எக்ஸ் தளத்தில் இட்ட பதிவில், 'மக்கள் மிகுந்த வலியில் இருக்கின்றார்கள், அவர்களுக்கு ஒய்வு தேவையாக இருக்கின்றது, நாளைய வட்டி வீதங்களை கனடா வங்கி குறைப்பதற்கான தருணம் இது' எனத் தெரிவித்துள்ளார்.

இன்றைய தினம் புதன்கிழமை கனடா வங்கியானது, புதிய வட்டி வீதங்கள் தொடர்பில் அறிவிக்கவுள்ள நிலையில் ஒன்ராறியோ மாநில முதல்வரின் அறிக்கை வெளியாகியுள்ளது.

### ஒஸாவா விபத்தில்...


(C1 ஆம் பகத்த் தொடர்ச்சி)

ஒஸாவா பகுதியில் வீதியை கடப்பதற்கு முயற்சித்த பெண் ஒருவர் மீது ட்ரக் ஒன்று மோதியதில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த 58 வயதான பெண்ணொருவர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட போதும், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்தினைத் தொடர்ந்து சில மணித்தியாலங்கள் மூடப்பட்டிருந்த பாதை, பின்னர் போக்குவரத்துக்குத் திறந்து விடப்பட்டுள்ளது.





# டொரன்டோவின் கடற்கரையில் கண்டெடுக்கப்பட்ட மனித உடல்பாகங்களை அடையாளம் காண முயற்சி

ஒன்ராரியோ,மார்ச்06

டொரன்டோவின் கடற்கரைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட மனித உடல் பாகங்களை அடையாளங் காணும் முயற்சியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

டொரன்டோவின் கடந்த வருடம் ஒக்டோபர் 29 மற்றும் 30ஆம் திகதிகளில் கண்டெடுக்கப்பட்ட உடல்பாகங்களினை அடையாளங் காணும் முயற்சிகள் தொடர்வதாக மார்ச் 5ஆம் திகதி நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த உடல் பாகங்கள் ஒரே நபருடையவை எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

மரபணு பரிசோதனைகளின் அடிப்படையில் இந்த உடல்பாகங்கள் 21-28 வயதுக்கு உட்பட்ட ஆணொருவருடையதாக இருக்கலாம் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உடல்பாகங்கள் கிடைப்பதற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் குறித்த நபர் உயிரிழந்திருக்கலாம் எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# பிரிட்டிஷ் கொலம்பியாவில் அரசு வறுமையைக் குறைக்கத் திட்டம்



பிரிட்டிஷ் கொலம்பியா, மார்ச் 06

மாநிலத்தில் வறுமையை அடுத்த பத்து வருடத்தில் 60 சதவீதமாக குறைப்பதற்கு திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்தவுள்ளதாக பிரிட்டிஷ் கொலம்பியா அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மார்ச் 5ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சட்டமானது ஏற்கனவே உள்ள மூன்று சட்டங்களில் வறுமை நீக்கத்திற்கு உயர் இலக்குகளை விதிக்கும் என மாநிலத்தின் வறுமை குறைப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

2018ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட வறுமை குறைப்பு இலக்கினை மாநிலம் ஏற்கனவே எட்டியுள்ளதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கான 2021ஆம் ஆண்டின் வறுமை விகித அறிக்கையின்படி மாநிலத்தின் வறுமை வீதம் 45 சதவீதமாக வீழ்ச்சி கண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வீட்டு உரிமையாளர்களைப் பாதுகாக்க எதிர்க்கட்சி முன்வைக்கும் சட்டமூலம்!

ஒன்ராரியோ, மார்ச் 06

ஒன்ராரியாவின் வீட்டு உரிமையாளர்களை மோசடிகளில் இருந்து காக்கும் சட்டமூலம் ஒன்றை மாநிலத்தின் எதிர்க்கட்சியான புதிய ஜனநாயகக் கட்சி முன்வைக்கவுள்ளது.

வெப்பமூட்டல் அல்லது காற்றோட்டத்தை ஏற்படுத்தும் சாதனங்களை வாடகைக்கு எடுப்பதற்குப் பதிலாக வீடுகளின் மீது நிறுவனங்கள் விதிக்கும் கட்டுப்பாடுகளை தடுக்கும் சட்டமூலம் ஒன்றை புதிய ஜனநாயக கட்சி முன்மொழிந்துள்ளது.

வீட்டு உரிமையாளரிற்குத் தெரியாதவாறு இந்த சாதனங்களை வாடகைக்கு எடுப்பதற்கு அல்லது விற்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்கும் சட்டவிரோத நிறுவனங்கள் அதிகரித்து வருவதாக மாநில எதிரக்கட்சி உறுப்பினர் லின்டா தெரிவித்துள்ளார்.

இந்த ஆபத்துக்களில் இருந்து வீட்டு உரிமையாளர்களைப் பாதுகாப்பதே முன்மொழியப்பட்ட சட்டமூலத்தின் நோக்கம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# டொரன்டோவில் 5 லட்சம் பேருக்கு குடும்ப வைத்தியர்கள் இல்லையாம்!

ஒன்ராறியோ, மார்ச் 06

டொரன்டோவில் உள்ள ஐந்து இலட்சம் பேருக்கு குடும்ப வைத்தியர்கள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

2026ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 1 மில்லியனாகும் மாறும் என குடும்ப வைத்தியர்களுக்கான ஒன்ராரியோ கல்லூரியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கட்டமைப்புசார் விடயங்களினால் குடும்ப வைத்தியம் என்பது பெரும் சிக்கலுக்குரிய காலத்திற்குள் இருப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குடும்ப வைத்தியத்தில் ஈடுபட்டுள்ள பல மருத்துவர்கள் அடுத்து வரும் வருடங்களில் ஓய்வுபெறவுள்ளமையுடன், புதிய மருத்துவர்கள் குடும்ப வைத்தியத்தை ஒரு தெரிவாக மேற்கொள்வதில்லை எனவும் அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

சில குடும்ப மருத்துவர்களும் அதிக அளவிலான நிர்வாகப் பணிகளைக் கொண்டிருப்பதாலும், மற்ற சுகாதாரப் பாதுகாப்பு நிபுணர்களுடன் சேர்ந்து நோயாளிகளின் பராமரிப்பை ஆதரிப்பதற்காக பல்துறை குழு சூழலில் மருத்துவம் செய்யாதமையாலும் தொழிலை விட்டு வெளியேறுகிறார்கள் என அந்த அறிக்கை தெரிவிக்கின்றது.